விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 180 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 03 புதன்கிழமை (17.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## செம்மணி மனிதப் புதைகுழி நேற்றும் 6 என்புத் தொகுதிகள்




(யாழ்ப்பாணம்)

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியிலிருந்து நேற்றைய தினமும் 06 என்புக் கூடுகள் அடையாளம் காணப் பட்டுள்ள நிலையில், இது வரை அடையாளம் காணப் பட்ட 15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு, கிழக்கில் மீட்கப்பட்ட தங்கம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குக
### குற்றப்புலனாய்வுக்கு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

யுத்தகாலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீட் கப்பட்ட தங்கப் பொருட்கள் தொடர்பில் விரிவான அறி க்கை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கொழு ம்பு பிரதான நீதிமன்றம் உத் தரவிட்டுள்ளது.

இலங்கை இராணுவத் தால் வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் நடைபெற்ற இரா ணுவ நடவடிக்கைகளின் போது மீட்கப்பட்ட 161 இலட் சம் மதிப்புள்ள 10 ஆயிரம் தங் கப்பொருட்களின் எடையி டல் நிறைவடைந்துள்ளதாக குற்றப் 15ஆம் பக்கம் பார்க்க

### ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியை
## பாதுகாப்பதற்கான சூழ்ச்சி ஒருபோதும் வெற்றிபெறாது
### பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் உண்மை சூத்திரதாரியை 02ஆம் பக்கம் பார்க்க

### இலங்கைக்கு இந்தியா
## 5 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் நன்கொடை

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடை யிலான நீண்டகால பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் 02ஆம் பக்கம் பார்க்க

# கைது செய்வதை தடுக்கக் கோரி
### முன்னாள் ஜனாதிபதி கோட்டா நீதிமன்றில் மனுத்தாக்கல்



(கொழும்பு)

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் தன்னைக் கைது செய்வதைத் தடுக்கக் கோரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ மேல் முறையீட்டு நீதி மன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

### 30ஆம் திகதிக்கு முன் அரச அதிகாரிகள்
## சொத்து விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க அதிகாரிகள் தங் களது வருடாந்த சொத்து மற் றும் 15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணிக்கு நீதி அமைச்சர் வெள்ளிக்கிழமை விஜயம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதை குழி 15ஆம் பக்கம் பார்க்க

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் உடன் விசாரணை நடத்துக
### கொழும்பில் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

கடந்த 2019 ஆம் ஆண்டு இலங்கை 16ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறாது ஒலிக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பதற்..

பாதுகாப்பதற்கு முன்னெடுக்கப்படும் சூழ்ச்சிகள் ஒரு போதும் வெற்றி பெறாது என பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை (15) நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சட்டத்துக்கு அப்பாற்பட்ட வகையில்தான் ஒருசிலர் செயற்படுவதற்கு முயற்சிக்கிறார்கள். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் சட்டத்துக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்படுவதற்கு முயற்சிக்கிறார்கள். இதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் விவகாரத்தில் உறுதிப்படுத்தப்பட்ட சாட்சியங்களைத் தொடர்ந்தே அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஸ் சலே கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். சுரேஷ் சலே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டதாகக் குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது.

சுரேஷ் சலே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் போலியான விடயங்களை முன்னிலைப் படுத்தி மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிப்பவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தவறான நிலைப்பாட்டை தோற்றுவிப்பது நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும் விசாரணைகளுக்கும் இடையூறு விளைவிப்பதாகும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ள சுரேஸ் சலேவுக்காக கோட்டை புகையிரத நிலையம் முன்பாக சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்ட விமல் வீரவன்ச தனது மனைவிக்காகவும், சகோதரனுக்காகவும், ஊடக செயலாளருக்காகவும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடலாம். குண்டுத்தாக்குதலின் உண்மைச் சூத்திரதாரியைப் பாதுகாப்பதற்கு முன்னெடுக்கப்படும் சூழ்ச்சிகள் ஒரு போதும் வெற்றி பெறாது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத் தடை விதித்த பின்னரே சுரேஷ் சலேவுக்காக பலர் குரல் கொடுக்க முன்னிலையாகியுள்ளனர்.

போராட்டங்கள் ஊடாக உண்மையை மூடிமறைக்க முயற்சிக்கிறார்கள். குண்டுத் தாக்குதல் தொடர்பான உண்மை வெகுவிரைவில் வெளிவரும் என்றார். (ம-7)

## 5 மில்லியன்...

இந்திய அரசாங்கத்தினால் 5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பாதுகாப்பு மற்றும் மருத்துவ உபகரணங்கள் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

அக்குரேகொட இராணுவத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில், இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்த உபகரணத் தொகுதியைப் பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்ய கொந்தவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா,

"இந்த நன்கொடையானது இரு நாடுகளின் ஆயுதப் படைகளுக்கிடையில் நிலவும் வலுவான மற்றும் நீண்டகால உறவின் மற்றொரு விசேட பிரதிபலனாகும். இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பானது பயிற்சி வாய்ப்புகள் மற்றும் மனித நேய உதவிகளுக்கு அப்பால் சென்று, தற்காப்புத் திறன்களை வளர்த்தல், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் இராணுவ உபகரணங்களை வழங்குதல் வரை தற்போது விரிவடைந்துள்ளது."

மேலும், "சாகர் பந்து" விசேட திட்டத்தின் கீழ், 'டித்வா' சூறாவளியினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு இந்தியா உடனடியாக வழங்கிய மனிதாபிமான உதவிகளையும் உயர்ஸ்தானிகர் இங்கு நினைவுகூர்ந்தார்.

அத்துடன் தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள், மருத்துவ உதவிகள் மற்றும் உட்கட்டமைப்பு மறுசீரமைப்புப் பணிகளை இலங்கை ஆயுதப் படைகளுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து செயற்படுத்திய விதம் குறித்தும் அவர் பாராட்டுத் தெரிவித்தார். (ம-7)

# சுரேஷ் சலே சித்திரவதை தொடர்பில் விசாரணை

## மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சலே பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்துள்ள முறைப்பாடு தொடர்பில் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று (16) குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் வாக்குமூலம் பெறப்படும் என அந்த ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் ஜி. புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் தடுப்புக் காவலில் உள்ள சுரேஷ் சலே பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக அவருடைய உறவினர்களால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அண்மையில் முறைப்பாடு ஒன்று அளிக்கப்பட்டிருந்தது.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில், சுரேஷ் சலே தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கூடம் குறித்து விசேட பரிசோதனை ஒன்று நடத்தப் பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சாதாரண சிறைக்கூடம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் அந்தச் சிறைக்கூடத்திற்குள் முறையான காற்றோட்டம் இல்லாதது உள்ளிட்ட பல பொதுவான அடிப்படைக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ம-7)


## சாரதி தேவை



தங்குமிட வசதி உண்டு

தொடர்புகளுக்கு :

**பிரபல கட்டிடப் பொருட்கள் விற்பனையாளர்**

**சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்**

**இல.55,57, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.**

**077 071 6329**

(C-5846)



### Kilinochchi District Secretariat

### INVITATION FOR BIDS (IFB)

### Procurement for Lift Maintenance Service, Cleaning Service, Security Service, Vehicle Service, Air Conditioners Service for the years of 2026/2027

The Chairman of Departmental Procurement Committee of Kilinochchi District Secretariat invites sealed bids from interested eligible and qualified Above procurement. Brief details are given below

1. Bidding Procedure will be conducted through **National Competitive Bidding** Process.
2. Interested eligible bidders may obtain further information and inspect the Procurement Documents at the address given below.

| Bid No | Name of Services | Non Refundable Fee. | Bid Validity Period | Bid Security | |
|---|---|---|---|---|---|
| | | | | Amount (Rs.) | Validity Period |
| KN/F/PMU/2027/S/LIF/01 | Servicing Maintenance of Passenger Lifts 2026/2027 | 1,000 | 22.09.2026 | 12,000 | 20.10.2026 |
| KN/F/PMU/2027/S/CLN/02 | Cleaning Service 2026/2027 | 3,500 | 22.09.2026 | 280,000 | 20.10.2026 |
| KN/F/PMU/2027/S/SEC/03 | Security Service 2026/2027 | 3,500 | 22.09.2026 | 550,000 | 20.10.2026 |
| KN/F/PMU/2027/S/VEH/04 | Servicing of Vehicles - 2026/2027 | 3,500 | 22.09.2026 | 60,000 | 20.10.2026 |
| KN/F/PMU/2027/S/ACS/05 | Servicing of Air Conditioners for the year of 2026/2027 | 3,500 | 22.09.2026 | 60,000 | 20.10.2026 |


3. A complete set of Bidding Documents may be obtained from 18.06.2026 to 06.07.2026 between 09:00 hrs and 15:30 hrs on working days upon payment of a non-refundable fee to the **District Secretary, Kilinochchi.**
4. A Pre Bid Meeting will be held on 30.06.2026 at 10.00Hrs at Conference Hall, District Secretariat, Kilinochchi.
5. The duly completed Bids must be delivered to **"Chairman, Departmental Procurement Committee, Kilinochchi District Secretariat, Kilinochchi"** or deposited in the "Procurement Box" available in the Chief Accountant's Room, Finance Branch on or before **10.00 Hrs on 07h of July 2026.** Bids will be opened immediately after the closing of bids. Bidders or their authorized representatives are allowed to be present at the time of opening of the Bids.
6. Bidders shall submit only the purchased bid document.
7. All rights are reserved to the Chairman of DPC to accept, reject or partially accept of any bids at any stage without paying any compensation to any party.

**Chairman,**
**Departmental Procurement Committee,**
**Kilinochchi District Secretariat,**
**Kilinochchi. T.P/ Fax: 021 228 5352, Web http://kilinochchi.dist.gov.lk**

(C-5848)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொற்று நோய் மட்டத்திற்கு தீவிரமடைந்துள்ள டெங்கு!




**(கொழும்பு) நாட்டில் டெங்கு நோய்த்தாக்கத்தின் வீரியம் தற்போது ஒரு பாரிய தொற்றுநோய் மட்டத்திற்கு தீவிரமடைந்துள்ளதாக நிர்வாக சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.**

இதன் காரணமாக, நாடளாவிய ரீதியில் இதுவரை அடையாளம் காணப்பட்டிருந்த 74 டெங்கு அதி அபாய வலயங்களின் எண்ணிக்கை, தற்போது 84 ஆக உயர்வடைந்துள்ளது.

தற்போது நிலவி வரும் மழையுடனான காலநிலை காரணமாக 14 மாவட்டங்களில் டெங்கு நோய் மிக அதிவேகமாகப் பரவி வருவதாக சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை,காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை குருநாகல், புத்தளம், இரத்தினபுரி, கேகாலை ,கண்டி, மாத்தளை, மட்டக்களப்பு, பதுளை ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோய் வேகமாகப் பரவி வருகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் பாடசாலை மாணவர்கள் இந்த டெங்கு வைரஸ் தொற்றுக்கு ஆளாகும் சாத்தியக் கூறுகள் மிகவும் அதிகமாகக் காணப்படுவதாக சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, பாடசாலை வளாகங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு பெற்றோர்களுக்கும் அதிபர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.(நி)

## காலி தேசிய வைத்தியசாலையில் தீ

(காலி)

காலி தேசிய வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை பிரிவு வளாகத்தில் உள்ள மின்மாற்றி ஒன்றில் திடீரென தீப்பிடித்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வைத்தியசாலை அதிகாரிகள், காலி மாநகர சபை தீயணைப்புப் படையுடன் இணைந்து, தீயைக் கட்டுக்குள் கொண்டுவர உடனடி நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் விளைவாக, வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை பிரிவிற்கான மின் விநியோகம் தற்காலிகமாகத் தடைப்பட்டது.

தீ விபத்திற்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. (நி)

## குடிநீர் விலைக்கு கட்டுப்பாடு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

நாட்டில் விற்பனை செய்யப்படும் குடிநீர் போத்தல்களுக்கான விலைகளில் நிலவும் முறைகேடுகளை தவிர்த்து அவற்றுக்கு முறையான கட்டுப்பாடு விலையொன்றை அறிமுகப்படுத்துவதற்கான புதிய தேசிய கொள்கைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு தெரிவிக்கும்போது அவர் இதனைக் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,தற்போது சந்தையில் 500 மில்லி லீற்றர் அளவிலான குடிநீர்ப் போத்தல்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. குறிப்பாக இரவு நேர உணவகங்கள் பேருந்துகள் மற்றும் புகையிரதங்களில் பொதுமக்களிடம் அதிக விலை வசூலிக்கப்படுவதாக புகார்கள் எழுந்துள்ளன.

புதிதாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த தேசிய குடிநீர் விலைக் கட்டுப்பாட்டுக் கொள்கையின் மூலம், நுகர்வோருக்கு நியாயமான விலையில் குடிநீர் கிடைக்கப் பெறும் என்றும், தன்னிச்சையாக விலைகளை உயர்த்தும் நிறுவனங்கள் முறைப்படுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, நாட்டில் ஏற்படக்கூடிய "எல் நினோ" வறட்சி நிலைமை மற்றும் அதனால் ஏற்படக்கூடிய நீர் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காக அரசாங்கம் அனைத்துப் பிரிவுகளையும் தயார்படுத்தியுள்ளது. (நி)

## ஒரு மாகாணத்திலாவது தேர்தலை நடத்திக் காட்டுங்கள்

### சன்ன ஜயசுமன பகிரங்கச் சவால்

(கொழும்பு)



நாட்டின் ஒன்பது மாகாண சபைகளில் ஏதேனும் ஒரு மாகாண சபையிலாவது தேர்தலை நடத்திக் காட்டுமாறு சர்வஜன அதிகாரம் கட்சியின் உப தலைவர் கலாநிதி சன்ன ஜயசுமன அரசாங்கத்துக்குப் பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

நிட்டம்புவ பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியன ஒன்றிணைந்து எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராகி வருகின்றன. இந்த நிலையில் இவ்வாறான அரசியல் கூட்டணிகள் உங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாதா என்று பலரும் வினவுகின்றனர்.

முதலில் தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும். அரசாங்கத்துக்குத் தைரியமிருந்தால் தேர்தலை நடத்திக் காட்டட்டும். மக்களின் பேராதரவு தமக்கு இருப்பதாகக் கூறிக்கொள்ளும் தற்போதைய அரசாங்கத்திற்கு, தைரியமிருந்தால் நாட்டின் 9 மாகாண சபைகளில் ஏதேனும் ஒரு மாகாண சபைக்காவது தேர்தலை நடத்திக் காட்டுமாறு சவால் விடுக்கின்றேன்.

விசேடமாக நாட்டின் விவசாய சமூகத்தினர் வாழும் பகுதிகள் இன்று பாரிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. தற்போதைய சூழ்நிலையில் நாட்டின் எந்தவொரு மாகாணத்திலும் குறிப்பாக விவசாயிகள் வாழும் பகுதிகளில் அரசாங்கத்தினால் 20 சதவீத வாக்குகளைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாது என அவர் தெரிவித்தார். (நி)

## உயிர்மாய்ப்பு தொடர்பான பதிவுகள் பகிர்வதை தவிருங்கள்

### சுகாதாரத்துறையினர் அவசர வேண்டுகோள்!

(கொழும்பு)

சமூக வலைத்தளங்களில் உயிர்மாய்ப்பு தொடர்பான காணொளிகள் மற்றும் பதிவுகளைப் பகிர்வதிலிருந்து விலகியிருக்குமாறு சுகாதாரத்துறை நிபுணர் கலாநிதி சதுரியா கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறான பதிவுகள் சமூகத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

கொவிட் 19 பெருந்தொற்று காலத்தில், பொதுமக்கள் மத்தியில் நேர்மறையான நடத்தைகள் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஊடகங்கள் மிக முக்கிய பங்காற்றியதை அவர் இதன்போது நினைவு கூர்ந்தார்."கொரோனா பெருந்தொற்று காலத்தில் ஊடகங்கள் நல்ல பழக்கவழக்கங்களை சமூகத்தில் உருவாக்க உதவின. உயிர்மாய்ப்பு போன்ற உணர்வுபூர்வமான விவகாரங்களிலும் ஊடகங்களின் அதே போன்ற பங்களிப்பு தொடர வேண்டும்," என்று அவர் குறிப்பிட்டார்.

உயிர்மாய்ப்புகளை மிகைப்படுத்திக் காட்டுவதையோ அல்லது அதனை மகிமைப்படுத்துவதையோ முற்றாகத் தவிர்க்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். (நி)

## 100 அடி பள்ளத்தில் பாய்ந்த முச்சக்கரவண்டி



(ஹற்றன்)

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை, கரோலினா பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் முச்சக்கரவண்டி பிரதான வீதியை விட்டு விலகி செங்குத்தான சரிவு ஒன்றில் சுமார் 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தலவாக்கலை நோக்கிச் சென்ற போதே, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தினால் முச்சக்கரவண்டிக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன், காயமடைந்த சாரதி உடனடியாக வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து வட்டவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## பண பரிவர்த்தனையின் போது அவதானத்துடன் செயற்படுங்கள்

### வெளிநாட்டு பயணிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

அங்கீகரிக்கப்பட்ட பண மாற்று மையங்கள் அல்லது உரிமம் பெற்ற வங்கிகள் மூலமாக மட்டுமே வெளிநாட்டு நாணயத்தைப் பரிமாற்றம் செய்யுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

அங்கீகரிக்கப்படாத நபர்கள் மூலம் பரிவர்த்தனைகளில் ஈடுபடுபவர்கள் கள்ள நோட்டு மோசடிகளுக்கு பலியாகும் அபாயம் உள்ளது என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேசிய மட்ட கோலூன்றி பாய்தல் யாழ். வீரர்கள் ஆதிக்கம்











கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட கோலூன்றி பாய்தல் போட்டி யில் யாழ் மாவட்ட வீராங்கனைகள் முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றி சாதனை படைத்துள்ளனர்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 62ஆவது தேசிய மட்ட கனிஷ்ட பிரிவினருக்கான மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு தியகம ராஜபக்ச மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் பெண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த செல்வி பி.சண்முகப்பிரியா 2.90 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கங்களையும். சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த செல்வி ப. வைஷ்ணவி. 2.80 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், அளவெட்டி அருணோதயக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த செல்வி. செ.திஷானா 2.60 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றி சாதனை படைத்துள்ளனர்.

அத்துடன் 20 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் யா /சாவகச்சேரி இந்துக் கல்லூரியை சேர்ந்த செல்வி ப. அபிசாளினி 3.41 மீற்றர் உயரம் பாய்ந்து முதலாம் இடத்தோடு தங்கப்பதக்கத்தையும் ஏற்கனவே யா/அருணோதயாக் கல்லூரியை சேர்ந்த செல்வி நிருசிகாவினால் நிலைநாட்டப்பட்ட3.40மீற்றர் போட்டிச்சாதனையை முறியடித்து 3.41மீற்றர் எனும் புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

மேலும் ஆண்கள் பிரிவில் பங்கேற்ற யா /ஸ்கந் வரோதயா கல்லூரியை சேர்ந்த செல்வன் சு. நிதன் ராஜ் . 4.00 மீற்றர் உயரம் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்று சாதனையைப் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-90)

# பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான எல்லே போட்டி

## மருதங்கேணி, கோப்பாய் அணிகள் சம்பியன்



வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ் மாவட்டச் செயலகத்தின் விளையாட்டு பிரிவினரால் நடத்தப்பட்டு வரும் எல்லே போட்டியில் மருதங்கேணி மற்றும் கோப்பாய் பிரதேச செயலக அணிகள் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

யாழ் மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மருதங்கேணி பிரதேச செயலக அணி 12 ஓட்டங்களை குவித்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கோப்பாய் பிரதேச செயலக அணி 5 ஓட்டங்களை மாத்திரம் பெற மருதங்கேணி பிரதேச செயலக அணி 7 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

அத்துடன் பெண்களுக்கான எல்லே போட்டி அராலி மாவத்தை விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து சங்கானை பிரதேச செயலக அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை பிரதேச செயலக அணி 7 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கோப்பாய் பிரதேச செயலக அணி 8 ஓட்டங்களை பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (3-90)



# மாகாண மட்ட குத்துச் சண்டைப் போட்டி சென். தோமஸ் மாணவிக்கு தங்கம்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான குத்துச்சண்டை போட்டியில் பருத்தித்துறை சென் .தோமஸ் ரோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை மாணவி க.நிறைஜினி முதன்முறையாக பங்குபற்றி தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான குத்துச்சண்டை போட்டி பருத்தித்துறை சென்.தோமஸ் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் 16 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான குத்துச்சண்டை போட்டியில் 43 கிலோ எடை பிரிவில் பருத்தித்துறை சென்.தோமஸ் ரோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை மாணவி க. நிறைஜினி



தங்கப் பதக்கத்தை கைப்பற்றி பாடசாலையின் வரலாற்றுச் சாதனையை பதிவு செய்துள்ளார். (90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோசிதவின் மனு மீதான தீர்ப்பு ஜூலை 3 ஆம் திகதி வெளியாகும்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோஷித ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள சீராய்வு மனு மீதான விசாரணைகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிறைவு செய்துள்ளதுடன், அதற்கான கட்டளையை ஜூலை மாதம் 3 ஆம் திகதி வெளியிடுவதாக அறிவித்துள்ளது.

நிதித் தூய்தாக்கல் சட்டத்தின் கீழ் தமக்கு எதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், "சதித்திட்டம்" என்ற குற்றச்சாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என தீர்ப்பளிக்குமாறு கோரி அவர் இந்த சீராய்வு மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மனுதாரரான யோஷித ராஜபக்ஷ சார்பில் சட்டத்தரணி ஹஃபீல் ஃபாரிஸ் விடயங்களை முன்வைத்ததுடன், சட்டமா அதிபர் சார்பில் பிரதி மன்றாடியார் நாயகம் ஜனக பண்டார விடயங்களை முன்வைத்தார்.

இதனையடுத்து விசாரணைகளை நிறைவு செய்த நீதியரசர்களான அமல் ரணராஜா மற்றும் சுமுது பிரேமச்சந்திர ஆகியோரைக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் இந்த முடிவை அறிவித்தது. (நி)

## டித்வா பேரழிவு

# ரயில் பாதை சேத மதிப்பு 300 மில்லியன் டொலர்கள்

(கொழும்பு)

டித்வா புயலால் சேதமடைந்த உள்நாட்டு பிரதான ரயில் பாதையைச் சீரமைக்கும் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவடையும் என ரயில்வே திணைக்களம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

சீரமைப்புப் பணிகளை ஆய்வுசெய்தபோது, உள்நாட்டு ரயில்வேக்கு பேரிடரால் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதாக போக்குவரத்து பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

பல இடங்களில் சேதமடைந்த ரயில் பாதைகள் சீரமைக்கப்பட்டுள்ளதாகவும், பேராதெனியாவிலிருந்து நாவலப்பிட்டியாவிற்கும், கொட்டகலையில் இருந்து நானுயோயாவிற்கும் செல்லும் ரயில் பாதைகள் தற்போது சீரமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நானுஓயாவிலிருந்து அம்பேவெல வரையிலான ரயில் பாதை சீரமைப்புப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாவலப்பிட்டியாவிலிருந்து ஹற்றனுக்கும், அம்பேவெல விலிருந்து பதுளைக்கும் ரயில் சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதாகவும் பதுளையிலிருந்து நானுஓயாவுக்கான ரயில் சேவை விரைவில் மீண்டும் தொடங்கும் என்றும் அவர் கூறினார். (நி)

## 83 இலட்சம் ரூபா பெறுமதியான

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் 5 வெளிநாட்டவர்கள் கைது

(கொழும்பு)

சுமார் 83 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற 5 வெளிநாட்டு பயணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலைய வருகை முனையத்தின், கிரீன் சேனல் ஊடாக இந்த சிகரெட் தொகையை கடத்திச் செல்ல முயன்ற போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றையதினம் முற்பகல் 11.15 மணியளவில் மலேசியாவின் கோலாலம்பூர் நகரிலிருந்து ஏர் ஏஷியா நிறுவனத்திற்குச் சொந்தமான OD-297 என்ற விமானம் மூலம் இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இதன்போது, அவர்கள் கொண்டு வந்த 5 பயணப் பொதிகளுக்குள் சீனாவில் தயாரிக்கப்பட்ட 55,400 சிகரெட்டுகளைக் கொண்ட 277 சிகரெட் கார்ட்டூன்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சீன நாட்டவர்களை சுங்கக் காவலில் வைத்துள்ள கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள், இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (நி)

## சீன பாதுகாப்பு ஆலோசகர்-இலங்கை பாதுகாப்பு பிரதியமைச்சர்

# சந்தித்து கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கைக்கான சீன மக்கள் குடியரசின் தூதரகத்தின் புதிதாக நியமிக்கப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் சிரேஷ்ட கேர்ணல் ஃபூசி யாவோ, பாதுகாப்பு பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவை (ஓய்வு) நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சின் அலுவலகத்தில் மரியாதை நிமித்தம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் பிராந்தியத்தில் பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த மூலோபாய விடயங்கள் குறித்து இருதரப்பினரும் சுமூகமாகக் கலந்துரையாடினர். (நி)

# கடன்சுமை அதிகரிப்பு

## அரசாங்கத்தை விமர்சிக்கும் தயாசிறி



(கொழும்பு)

கடந்த 16 மாத காலப்பகுதிக்குள் நாட்டின் ஒட்டுமொத்த கடன் சுமை 28 ட்ரில்லியன் ரூபாவிலிருந்து 35 ட்ரில்லியன் ரூபா வரை, மேலும் 7 ட்ரில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைப் குறிப்பிட்டுள்ளார்.

"கடந்த 76 வருட காலப்பகுதியில் நாட்டின் ஒட்டுமொத்த கடன் சுமையே 28 ட்ரில்லியன் ரூபாவாகத்தான் காணப்பட்டது. ஆனால், தற்போதைய குறுகிய காலப்பகுதிக்குள் அது மேலும் 7 ட்ரில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது.

இது குறித்து நான் பாராளுமன்றத்திலும் கேள்வி எழுப்பியிருந்தேன்.

கடன் வாங்கி அரசாங்கம் நடத்தத் தேவையில்லை என்று கூறியவர்கள், இன்று எங்களை விடவும் அதிகமாகக் கடன் பெற்று வருகின்றனர்.

நாட்டின் உண்மையான பொருளாதார நிலைமை என்ன என்பதை மக்கள் எதிர்காலத்தில் புரிந்து கொள்வார்கள்.

என்ன நடக்கப் போகிறது என்பதை நாட்டின் மக்களே உணர்ந்து கொள்ளும் காலம் தூரத்தில் இல்லை" என்றும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## டித்வா அனர்த்தம்

# மேலும் 90 புனித தலங்களை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

டித்வா அனர்த்த நிலைமையினால் பாதிக்கப்பட்டுள்ள புனித தலங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான விசேட வேலைத்திட்டத்தின் கீழ், மேலதிகமாக 90 புனித தலங்களை புனரமைப்பதற்கான நிதியொதுக்கீட்டு யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள் ளது.

டித்வா அனர்த்தத்தினால், மொத்தமாக 758 விகாரைகளும், 272 இந்துக் கோயில்களும், 199 முஸ்லிம் பள்ளிவாசல்களும், 99 கிறிஸ்தவ ஆலயங்களும் பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளமை பதிவாகியுள்ளது.

கடந்த 2026.04.27 அன்று எட்டப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய ஒதுக்கப்பட்ட 200 மில்லியன் ரூபா உள்ளடங்கலாக, புத்தசாசன நிதியம், மத்திய கலாசார நிதியம் மற்றும் அநகாரிக தர்மபால மன்றம் ஆகியவற்றின் மூலமாக 800 மில்லியன் ரூபா நிதி திரட்டப்பட்டது.

இந்த நிதியைப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்ட புனித தலங்களில் 178 இடங்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எஞ்சியுள்ள புனித தலங்களில் மேலும் 90 இடங்களைப் புனரமைப்பதற்காக, புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 01/2026 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய, 129.69 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த 90 வணக்கத்தலங்களின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கே தற்போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நெல்லுக்கான நிர்ணய விலையை வலியுறுத்தி கிளிநொச்சி விவசாயிகள் கவனயீர்ப்பு

(தருமபுரம்)

**நெல்லுக்கான நிர்ணய விலையை அரசாங்கம் வழங்க வலியுறுத்தி கிளிநொச்சி விவசாயிகள் நேற்றைய தினம் கவனயீர்ப்பு பேரணி ஒன்றினை முன்னெடுத்திருந் தனர்.**



கிளிநொச்சி நகர் சித்தி விநாயகர் ஆலய முன்றலிலிருந்து மாவட்ட செயலகம் வரை முன்னெடுக்கப்பட்டு தமது கோரிக்கை அடங்கிய மகஜரை மாவட்ட அரசாங்கதிபர் சுப்பிரமணியம் முரளிதரனிடம் ஜனாதிபதி, மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர், விவசாய அமைச்சர் உள்ளிட்டோருக்கு கையளித்திருந்தனர்.

தற்போது அரசாங்கமானது ஒரு கிலோ நெல்லை 120 ரூபாவிற்கு கொள்வனவு செய்கின்றது.

இது உற்பத்தி செலவுக்கு போதுமானதாக இல்லை எனவும் 135ரூபாவுக்கு அரசாங்கம் நெல்லை கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் விவசாயிகள் தெரிவித்தனர். (8-316)

## சர்வதேச மனக்கணிதப் போட்டியில் முல்லை.கலைமகள் வித்தியாலயம் சாதனை




(கண்டாவளை)

சர்வதேச Icam ABACUS மனக் கணிதப் போட்டியில் முல்லைத்தீவு கலை மகள் வித்தியாலய மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

குறித்த பாடசாலையைச் சேர்ந்த மாணவன் துஷ்யந்தன் (வயது 9) 1 ஆம் இடத்தைப் பெற்று தேசிய மட்ட மனக் கணிதப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். இந்தப் போட்டியானது கடந்த 4ஆம் திகதி மலேசியாவில் நடைபெற்றது.

குறித்த போட்டியில் 13 நாடுகளைச் சேர்ந்த 2500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

இந் நிலையில் குறித்த மாணவன் Level 1B பிரிவில் 1ஆம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

அதே வேளை குறித்த போட்டியில் Junior Level இல் முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயத்தைச் சேர்ந்த ச.தக்சவி, ஜெ.பார்த்தீவ் ஆகியோர் 1ஆம் இடத்தையும் ப.தன்விஸ் 2ஆம் இடத்தையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-315)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் - வழுக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும் 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (8)

## கைலாய வாகனம் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு புதிதாக அமைக்கப்பெற்ற கைலாய வாகன வெள்ளோட்டம் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். (8)

## யாழ். நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் யோகாப் பயிற்சிகள்



(யாழ்ப்பாணம்)

உலக யோகா தினத்தை முன்னிட்டு யாழ். நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் யோகாப் பயிற்சிகள் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் நேற்றைய தினம் நடைபெற்றது

யோகாப் பயிற்சியினை பாடசாலை அதிபர் ஆரம்பித்து வைத்தார்.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் சிரேஷ்ட விரிவுரையாளர் கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நீரிழிவுக் கழக உறுப்பினர்கள் பயற்சியில் கலந்து கொண்டனர். (8)

## 'எங்கள் முற்றம்' இதழ் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

மக்கள் கலை இலக்கியப் பேரவையின் "எங்கள் முற்றம்" கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழ் வெளிவந்துள்ளது.

இவ் இதழில் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் நூல் வெளியீட்டு நிகழ்வுகள் போன்ற பல ஆக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (8)

## கலைஞர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கலாமன்றங்களின் கலைஞர்களுக்கான விசேட ஒன்று கூடல் நிகழ்வு, கடந்த சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த பாரம்பரியக் கூத்துக் கலைஞர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள், நவீன நாடக மற்றும் இசைக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்கள் எனப் பல்துறை சார்ந்த கலைஞர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். (8-[illegible])

## பருத்தித்துறை - சுப்பர்மடம் இந்து மயானத்தில் சிரமதானம்

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட சுப்பர் மடம் பொது இந்து மயானம் அண்மையில் தூய்மைப்படுத்தப் பட்டது.

"தம்பசிட்டி நண்பர்கள்" அமைப்பின் ஒருங்கிணைப்பில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வில் பல்வேறு சமூகமட்ட அமைப்புக்கள், கிராம இளைஞர்கள் மற்றும் தம்பசிட்டி நண்பர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒருங்கமைப்பாளர்களின் எழுத்து மூல வேண்டுகோளுக்கு அமைவாக அங்கு சேகரிக்கப்பட்ட கழிவுகளை அகற்றுவதற்கு பிரதேச சபை யினால் கழிவகற்றல் வாகனம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-60)

## பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஒட்டுசுட்டானில் வட்டியில்லாக் கடன்

(நெளுக்குளம்)

ஒட்டுசுட்டான் - கூழாமுறிப்பு கிராமத்தில் இயங்கும் மகளிர் குழு உறுப்பினர்களுக்கான வட்டியில்லா கடன் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

5 பயனாளிகளுக்கு தலா 50ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தமாக 2இலட்சத்து 50ஆயிரம் ரூபாய் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிதி உதவி அவுஸ்திரேலியாவில் இயங்கி வரும் தமிழ் மகளிர் அபிவிருத்திக் குழுவின் நிதிப் பங்களிப்பில் வழங்கப்பட்டது.

குடும்பங்களின் வாழ்வாதாரம் மற்றும் பெண்களின் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்கில் குறித்த கடன் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் வே. கரிகாலன், ஒட்டுசுட்டான் பிரதேச செயற்பாட்டு அணித் தலைவர், மகளிர் குழுக்களின் தலைவர்கள், பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (8-299)

## எரிபொருள் பரிசோதனையின் போது திடீரென தீப்பற்றிய மோட்டார் சைக்கிள்



(தருமபுரம்)

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு பகுதியில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை, எரிபொருள் பரிசோதனையின் போது மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது.

கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமான மோட்டார் சைக்கிளே, இவ்வாறு திடீரென தீப்பற்றி முற்று முழுதாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

பிரதேச சபையின் உறுப்பினர்கள் குறித்த மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் பரிசோதனை செய்து கொண்டிருந்த போது, திடீரென தீப்பற்றி எரிந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (8-316)



யா/ஒட்டகப்புலம் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மற்றும் குரும்பசிட்டி பொன்பரமானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான பற்சிகிச்சை நடவடிக்கைகள் அண்மையில் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 120,000 இற்கும் மேற்பட்டோருக்கு இந்த ஆண்டிற்குள் அரச வேலைவாய்ப்புகள்

(கொழும்பு)

இந்த ஆண்டு 120,000 இற்கும் மேற்பட்டோர் அரச சேவையில் சேர்க்கப்படவுள்ளதாக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அரச சேவையை வலுப்படுத்தாமல், நாட்டை கட்டியெழுப்பும் இலக்குகளை அடைய முடியாது என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்க நிறுவனங்களும் பாடசாலைகளும் அதிக அபாயமுள்ள இடங்களில் உள்ளன என்று பிரதமர் வெளிப்படுத்தியிருந்த நிலையில் இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, அரச ஊழியர்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்குத் தேவையான பொருளாதார வலிமையை வழங்குவதற்காக அரசாங்க வரவு- செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அவர்கள் பதவியேற்றபோது உணர்ந்த மகிழ்ச்சியுடன் ஓய்வுபெறும் வாய்ப்பை வழங்குவதே இதன் நோக்கம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி)

# தேசிய வீடமைப்புத் திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் கையளிப்பு



(தருமபுரம்)

2026 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக செயற்படுத்தப்படும் "தமக்கென ஓர் இடம் - அழகான வாழ்க்கை" தேசிய வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய வீடு அமைப்பதற்காக 35 குடும்பத்திற்கு காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் கரைச்சி மற்றும் கண்டாவளை ஆகிய இரண்டு பிரதேச செயலக பிரிவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நான்கு வீடுகள் தேசிய வீடமைப்பு நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர் ரீ.பீ.சரத் அவர்களால் நேற்றைய தினம் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், கிளீன் ஸ்ரீலங்க மாவட்ட பணிப்பாளர், மாவட்ட திட்டமிடல் பிரதி பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.(8-316)

# மாகாணமட்ட மென்பந்தாட்ட போட்டி நடேஸ்வரக் கல்லூரி சம்பியன்

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதிற்குட்பட்ட பெண்கள் மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டி கடந்த 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் மு/பாலிநகர் ம.வித்தியாலயத்தில் நடைபெற்றது.




மேற்படி போட்டியில் யா/நடேஸ்வராக்கல்லூரி பெண்கள் அணியினர் வரலாற்றில் முதற்தடவையாக சம்பியனாகி தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகி பாடசாலைக்கும் பாடசாலை சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். (3)

# ரணிலின் மீள் அரசியல் பிரவேசம் எதிர்க்கட்சிகளுக்கு பாரிய பலம்

## உதய கம்மன்பில உற்சாக வரவேற்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் மீள்வருகையானது, எதிர்க்கட்சிகளுக்குப் பாரிய பலமாக அமையும் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் மீள் அரசியல் பிரவேசம் குறித்து ஊடகவியலாளர்கள் முன்வைத்த கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே பிவிதுரு ஹெல உருமய தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில மேற்கண்ட கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,கடந்த காலங்களில் பொதுவெளியில் பகிரங்கமாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டாதபோதும், ரணில் விக்கிரமசிங்க அரசியல் களத்தை விட்டு முற்றாக ஒதுங்கியிருக்கவில்லை.

நாங்கள் பல்வேறு தடவைகள் நேரிலும், தொலைபேசி வழியாகவும் அரசியல் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடியுள்ளோம். அடிக்கடி சந்தித்துக் கொண்டுள்ளோம்.

அந்த வகையில் அவர் ஆர்ப்பாட்டமின்றி அரசியல் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். தற்போது மீண்டும் பொதுவெளி அரசியல் செயற்பாடுகளுக்குத் திரும்பி வர உத்தேசித்துள்ளார்.

அது உண்மையில் எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரை பெரும்பலமாக அமையும் என குறிப்பிட்டுள்ளார். (நி)

# தெற்காசிய எறிபந்து போட்டி வவுனியா வீரர்கள் இடம்பிடிப்பு




இந்தியாவில் நடைபெறவுள்ள தெற்காசிய நாடுகளுக்கிடையிலான எறிபந்து சம்பியன்ஷிப் தொடருக்கான இலங்கை தேசிய அணியில், வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த இரு வீரர்கள் உத்தியோகபூர்வமாகத் தெரிவு செய்யப்பட்டு வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

ஜூன் 16ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை இந்தியாவில் விறுவிறுப்பாக நடைபெறவுள்ள இத்தொடரில், இலங்கை தேசிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடும் அரிய வாய்ப்பை இவர்கள் பெற்றுள்ளனர்.

எறிபந்து விளையாட்டில் தேசிய மட்டத்தில் தங்களது அசாத்திய திறமைகளை வெளிப்படுத்தியதன் மூலம் வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் தற்போதைய மாணவனான நா.நாவேந்தன் மற்றும் கனகராஜன்குளம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரும், தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவருமான எ.[illegible] ஆகியோர் இலங்கை அணிக்குள் [illegible].

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 08, பருத்தித்துறை வீதி 4 ஆம் ஒழுங்கை 19 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் திருமதி. மகாதேவா என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் துரைராஜா இராஜசிங்கம் அவர்கள் 08.10.1961 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சூசைப்பிள்ளை தனபாலசிங்கம் முகதாவில் 3588 ஆம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் குமாரசாமி சிவசோதி பெண் மங்கயற்கரசிக்கு வழங்கியுள்ளார்

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் துரைராஜா இராஜசிங்கம அவர்கள் 08.10.1961 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சூசைப்பிள்ளை தனபாலசிங்கம் முகதாவில் 3589 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் ஆனைப்பந்தி துரைராஜா ராஜேஸ்வரிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் ஆனைப்பந்தி பருத்தித்துறைவீதி யாழ்ப்பாணம் தற்போது அவுஸ்ரேலியாவில் வசிக்கும் அரசரட்ணம் நிர்மலேந்திரன் நியுசிலாந்தில் வசிக்கும் அரசரட்ணம் சத்தியேந்திரன் மற்றும் அவுஸ்ரேலியாவில் வசிக்கும் கதிர்காமலிங்கம் இந்திரா ஆகியோர் தமது அற்றோனித்தத்துவக்காரர் ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் தாமோதரலிங்கம் கதிர்காமலிங்கம் மூலமும் குறித்த தாமோதரலிங்கம் கதிர்காமலிங்கமும் சேர்ந்து 27.03.2021 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 1472 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கந்தையா சுந்தரலிங்கம் பெண் விஜயராணிக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணம் மாநகர சபை நல்லூர் பிரதேச செயலர் பிரிவு வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை J/105 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள இக்கிரித்தோட்டம் நில.பர 03 குளி 9. இது நில அளவையாளர் T.கந்தையா 25.08.1961 ஆம் திகதி அளந்து தயாரித்த 1008 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 3 ஆக காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு மூன்று குளி ஒன்பதுக்குரிய எல்லை.

கிழக்கு: ஒழுங்கை

வடக்கு : துண்டு 1 என காட்டப்பட்ட குமாரசாமி சிவசோதி பெண் மங்கயற்கரசியின் ஆதனம்

மேற்கு: துண்டு 2 என காட்டப்பட்ட துரைராஜா இராஜசிங்கத்தின் ஆதனம்

தெற்கு : ஒழுங்கை

இதடங்கலும் செய்பயிர் வான்பயிர்கள் உட்பட இதற்குச்சேர்ந்தவைகளும் வடக்கு எல்லை ஆதனத்தில் உள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்கால் பாவிப்புரித்தும்.

தற்போது இவ்வாதனத்தை சுந்தரலிங்கம் பெண் விஜயராணி என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சுந்தரலிங்கம் பெண் விஜயராணி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர், மாநகரசபை.** (C-5847)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பிரதமர் மோடிக்கு ஸ்லோவாக்கியாவின் மிக உயரிய விருது வழங்கி கௌரவிப்பு

(டில்லி)

பிரதமர் நரேந்திர மோடிக்கு ஸ்லோவாக்கியா நாட்டின் மிக உயரிய விருது, "தி ஆர்டர் ஆஃப் தி வைட் டபுள் கிராஸ்," வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளது. இது பிதமர் நரேந்திர மோடி பெறும் 33ஆது சர்வதேச அங்கீ காரம் ஆகும்.

பர்டிஸ்லாவாவில் நடை பெற்ற நிகழ்ச்சியில் ஸ்லோ வாக்கியா நாட்டின் ஜனாதிபதி பீட்டர் பெல்லக் ரினி இந்த விருதை பிரதமர் மோடிக்கு வழங்கினார்.

விருது குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி, "பிரடிஸ் லாவாவில் தி ஆர்டர் ஆஃப் தி வைட் டபுள் கிராஸ் விருதை பெற்றுக் கொண்டது பெருமையளிக் கிறது.

140 கோடி இந்தியர்க ளுக்கு சொந்தமான இந்த விருதை பெற்றுக் கொண் டதற்கு ஸ்லோவாக்கிய மக் கள் மற்றும் அரசுக்கு நன்றி கள். இந்தியா மற்றும் ஸ்லோவாக்கியா நட்புக்கு இந்த விருதை நான்அர்ப்ப ணிக்கிறேன்," என குறிப் பிட்டுள்ளார்.




தி ஆர்டர் ஆஃப் தி வைட் டபுள் கிராஸ் ஸ்லோவாக் கியா சார்பில் வெளிநாட்டின ருக்கு வழங்கப்படும் மிக உயரிய விருது ஆகும். ஐரோப்பா நாடுகளுக்கு சுற் றுப் பயணம் மேற்கொண் டுள்ள பிரதமர் மோடி பிரடிஸ்லா வாவுக்கு சென்று ள்ளார். இந்த ஐரோப்பிய நாட்டிற்கு பயணம் தெய்த முதல் இந்திய பிரதமர் நரேந்திர மோடி என்பது குறிப்பிடத்தக்கது.


முன்னதாக இந்தியா மற்றும் ஸ்லோவாக்கியா இடையே பல்வேறு துறை களில் வளர்ச்சி மற்றும் கூட்டாண்மை வலியுறுத் தும் 11 ஒப்பந்தங்கள் கையெ முத்தாகின. (3)

## தீவிரமடையும்...

## ஒரே நாளில் 72...







மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசில் பரவி வரும் எபோலா வைரஸ் பாதிப்பு வரலாறு காணாத அளவில் தீவிரமடைந்துள்ளது.

இதன் மூலம் எபோலா நோய்த் தொற்றால் பாதிக்கப் பட்டவர்களின் மொத்த எண் ணிக்கை 782 ஆகவும், பலியானோரின் எண் ணிக்கை 178 ஆகவும் உயர்ந்துள் ளது.

முந்தைய பாதிப்புகளை ஏற்படுத்திய "ஜைர்" வைரஸ் போலல்லாமல், தற்போது பரவி வரும் "புண்டிபுகியோ" என்ற அரிய வகை எபோலா வைரஸ் திரிபிற்கு இதுவரை அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளோ அல்லது முறை யான சிகிச்சைகளோ இல்லை

## இந்தியாவில் டெலிகிராம் செயலிக்கு தற்காலிக தடை

### மத்திய அரசு அதிரடி

(டில்லி)

இந்தியாவில் டெலிகிராம் செயலிக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.





கடந்த மே 3 ஆம் திகதி நடைபெற்ற இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான 'நீட்' நுழைவுப் பரீட்சையின் வினாத்தாள் முன்கூட்டியே கசிந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்ததைத் தொடர்ந்து, பல மாநிலங்களில் விசா ரணைகள் முன்னெடுக் கப்பட்டன. ராஜஸ்தான், பிகார் உள்ளிட்ட பகுதிகளில், வினாத்தாள் கசிவு தொடர்பில் பலர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதனை அடுத்து, முன்னர் நடைபெற்ற நீட் தேர்வு இரத்து செய்யப்பட்டு, மீள்பரீட்சை எதிர்வரும் ஜூன் 21 ஆம் திகதி நடை பெறவுள்ளது. தேர்வின் பாதுகாப்பை உறுதிப்ப டுத்தும் நோக்கில் மத்திய அரசு பல்வேறு விசேட நட வடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

இந்நிலையில், தேர்வு தொடர்பான தகவல்கள் மீண்டும் கசியாமல் தடுக்கும் வகையில், தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000 இன் பிரிவு 69A இன் அவசரகால விதிகளின் கீழ், டெலிகிராம் செயலிக்கு ஜூன் 22 ஆம் திகதி வரை தற்காலிக தடை விதிக்கப்பட் டுள்ளதாக இந்திய மின்ன ணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் அறிவித்துள்ளது.

மேலும், டெலிகிராம் தளத்தில் ஏற்கனவே அனுப்பப்பட்ட செய்திகளை திருத்தும் வசதியையும் எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதி வரை முடக்குமாறு அதிகாரிகள் உத்தர விட்டுள்ளனர்.

நீட் பரீட்சையின் வினாத் தாள் டெலிகிராம் வழியாக பரவியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளின் அடிப்ப டையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (3)

## எத்தியோப்பியாவில்...

## கவிழ்ந்து வி...

### 31 பேர் உயிரிழப்பு





(அடிஸ் அபாபா)

எத்தியோப்பியாவின் வடக்கே அம்ஹாராவின் டெஸ்ஸி பகுதியில் இருந்து தலைநகரை நோக்கி ஒரு பயணிகள் பேருந்து நேற்று

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ம் எபோலா வைரஸ்
## 72 பேர் அடையாளம்

(கின்சாஷா) ——

**கொங்கோவில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் புதிய உச்சமாக 72 பேருக்கு எபோலா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் 29 பேர் உயிரிழந்துள்ளனர்.**

என்பது உலக சுகாதார அதிகாரிகளிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. தற்போதைய நிலவரப்படி. இந்த வைரஸ் பாதிப்புக்குள்ளானவர்க ளில் மரண விகிதம் 22.8 சதவீதமாக உள்ளது.

கிழக்குப் பகுதியான இத்தூரி மாகாணம் இந்த எபோலா பரவலின் மையப்பகுதியாக மாறியுள்ள துடன், ஒட்டு மொத்த பாதிப்பில் 95 சத வீதம் இங்குதான் பதிவாகியுள்ளது.

இங்கிருந்து அண்டை மாகாணங்களான வட கிவு, தென்கிவு மற்றும் அண்டை நாடான உகாண்டாவிற்கும் இந்த வைரஸ் பரவத் தொடங்கியுள்ளது.

எபோலா பரவலின் உண்மையான வீரியத்தை துல்லியமாகக் கணிக்க முடியவில்லை என "எல்லைகளற்ற மருத்துவர்கள்" அமைப்பு எச்சரித்துள்ளதுடன், தடுப்பு நடவடிக்கைகளுக்கு 21.5 மில்லியன் டொலர் நிதிப் பற்றாக்குறை நிலவுவதாகவும் கவலை தெரிவித்துள்ளது. (3)

# ...ல் பேருந்து விபத்து

முன்தினம் மலைப்பாங் கான வளைவுப் பாதையில் சென்றுகொண்டிருந்த போது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து திடீரென செங்குத்தான பள்ளத்தில் தலைகீழாகக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்தவர்கள்களில் 31பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் உள்நாட்டு மோதல்களால் அப்பகுதியில் போதிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை. எனவே அம்புலன்ஸ் மற்றும் மீட்பு குழுக்கள் வருவதில் சிக்கல் ஏற்பட்டது.


அங்கிருந்த உள்ளூர் மக்களே களத்தில் இறங்கி காயமடைந்தவர்களை மீட்டு அவ்வழியே வரும் வாகனங்களில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர்.

உரிய நேரத்தில் முதலுதவி மற்றும் மருத்துவ சிகிச்சை கிடைக்காத காரணத்தினாலேயே உயிரிழப்பு எண்ணிக்கை இவ்வளவு அதிகமாக உயர்ந்ததாக தெரியவந்துள்ளது. எத்தியோப்பியாவில் மோச மான சாலைகளால் சாலை விபத்துகள் தொடர்கதையாகி வருகின்றன.

முன்னதாக கடந்த 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தெற்கு சிடாமா பகுதியில் ஒரு பயணிகள் பேருந்து ஆற்றில் கவிழ்ந்த விபத்தில் 66 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (3)



# அமெரிக்காவின் குண்டுவீச்சு விமானம் விபத்து
## 8 பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

தெற்கு கலிபோர்னியாவில் உள்ள எட்வர்ட்ஸ் விமானப்படைத் தளத்திலிருந்து புறப்பட்ட உடனேயே அமெரிக்க விமானப்படையின் பி-52 ரக குண்டுவீச்சு விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் போயிங் நிறுவன ஊழியர்கள் இருவர் உட்பட எட்டு பேர் உயிரிழந்தனர்.

திங்கட்கிழமை உள்ளூர் நேரப்படி காலை 11:20 மணிக்கு விமானம் வழக்கமான சோதனைப் பணியில் ஈடுபட்டிருந்த போது இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

இந்த விபத்தால் வானில் பெரும் கறுப்புப் புகை மண்டலம் எழுந்தது, அது பல மைல்களுக்குத் தெரிந்தது.

விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை என்றும், விசாரணையை முடிக்க ஆறு மாதங்கள் வரை ஆகலாம் என்றும் எட்வர்ட்ஸில் உள்ள 412 சோதனைப் பிரிவின் துணைத் தளபதியான கர்னல் ஜேம்ஸ் ஹேய்ஸ் ஒரு செய்தியாளர் சந்திப்பில் கூறினார். (3)

# வறட்சியினால் உலக அளவில்
## 1.8 பில்லியன் சிறுவர்கள் ஆபத்தில்




(வோஷிங்டன்)

உலகில் உள்ள ஒட்டு மொத்த சிறுவர்களில் பெரும்பாலானோர் ஏதேனும் ஒரு காலநிலை ஆபத்தை எதிர் கொண்டுள்ளதுடன், வறட்சியின் காரணமாக மாத்திரம் சுமார் 1.8 பில்லியன் சிறுவர்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் எச்சரித்துள்ளது.

மேலும், 1.2 பில்லியன் சிறுவர்கள் அதீத வெப்ப அலையினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தீவிரம் அடைந்து வரும் காலநிலை மாற்ற அபாயங்களினால் சிறுவர்களே "மிகக் கடுமையான பாதிப்புகளை" எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவித்துள்ள யுனிசெப் அமைப்பு, சிறுவர்கள் மீதான இந்த பாதிப்புக்களைக் குறைப்பதற்காக உட்கட்டமைப்பு, காலநிலை தழுவல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ திறன்களில் அரசாங்கங்கள் அவசரமாக முதலீடு செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டில் மட்டும், 85 நாடுகளில் உள்ள 242 மில்லியன் சிறுவர்களின் பாடசாலைக் கல்விக் காலநிலை பேரழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தினால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய நாடுகளாக சோமாலியா, மடகாஸ்கர், மியான்மர், கம்போடியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளை யுனிசெப் அடையாளம் கண்டுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டச் செயலகத்தின் வர்த்தக சந்தையும் விற்பனைக் கண்காட்சியும்



(மன்னார்)

மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட வர்த்தக சந்தையும், விற்பனை கண்காட்சி மற்றும் தொழிற்சந்தையும் கடந்த திங்கட்கிழமை மன்னார் நகர மத்திய சுற்று வட்டத்திற்கு அண்மையில் இடம்பெற்றது

குறித்த நிகழ்வை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் பிரதேசச் செயலாளர்,உதவி மாவட்டச் செயலாளர்,திணைக்கள தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (8-285)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட வேண்டாம்

## வெற்றிலைக்கேணி கடற்படை அதிகாரி அறிவுறுத்தல்

(கரணவாய்)

வெற்றிலைக்கேணி கடற்படை கட்டளை மையத்திற்கு உட்பட்ட வடமராட்சி கிழக்கு பகுதிகளில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட வேண்டாமென வெற்றிலைக்கேணி கடற்படை அதிகாரி மீனவர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வடமராட்சி கிழக்கில் அதிகரித்துள்ள சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்த நாம் தொடர் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறோம்.

இவர்கள் பல்லாயிரக்கணக்கான மீன்களை அழித்துவருவதோடு ஏனைய மீனவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றனர்.

இவ்வாறு சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களை கைது செய்யும் போது கடற்படை தம்மை தாக்குவதாக பொய்யான தகவலை பரப்பி வருவதாகவும், மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையை விரைவில் கட்டுக்குள் கொண்டு வருவோமெனவும் தெரிவித்தார். (8-60)



தென்மராட்சி கல்வி வலயத்தின் தென்னருவி-2026 வர்த்தகக் கண்காட்சி அண்மையில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெற்றிருந்தது. (படம்: சுபேசன்)

# குருபூசை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தில் ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளின் 36 ஆவது குருபூசை எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும் என அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 150 | 450 | 160 | 300 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | -- | 240 | -- |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 400 | 550 | 700 | -- |
| தக்காளி | 850 | 700 | 800 | 700 | 1000 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 | 150 | 200 | 200 |
| கோவா | 300 | 300 | 350 | 260 | 250 | 250 |
| கரட் | 250 | 450 | 500 | 450 | 450 | 450 |
| பூசணி | 100 | 120 | 120 | 100 | 160 | 100 |
| புடோல் | 150 | 200 | 200 | 150 | 200 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 100 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 450 | 450 | -- |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 250 | -- | 200 | 200 |
| பாகற்காய் | 1400 | 1800 | 2000 | 2000 | 1600 | 800 |
| வெண்டக்காய் | 180 | 200 | 300 | 130 | 300 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 200 | 400 | 400 | -- |
| பயற்றங்காய் | 600 | 400 | 300 | 400 | 450 | 450 |
| லீக்ஸ் | 400 | 450 | 500 | 400 | 400 | 400 |
| பீற்றூட் | 350 | 400 | 500 | 400 | 500 | 600 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 350 | 500 | 450 |
| முருங்கைக்காய் | 1500 | 1300 | 1500 | 1000 | 1200 | 1000 |
| போஞ்சி | 650 | 600 | 600 | 600 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 120 | 300 | -- | 250 | -- |
| கீரை – 1 பிடி | 120 | 50 | 150 | 80 | 80 | -- |
| தேசிக்காய் | 500 | 450 | 400 | 400 | 500 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 80 | 120 | 100-140 | -- |
| இராசவள்ளி | 400 | 350 | 350 | 350 | 300 | -- |
| வெங்காயப்பூ | 600 | 400 | 800 | 420 | 500 | -- |
| முள்ளங்கி | 200 | 250 | 200 | 180 | 300 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 200 | -- | 60 | -- |
| வல்லாரை | 60 | 70 | 80 | -- | 100 | -- |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | 250 | -- |

# இராசிபலன்

17.06.2026
ஆனி 03, புதன்கிழமை
திருதியை பின்னிரவு 2.37 மணிவரை

புநர்பூசம் முன்னிரவு 6.13 மணிவரை
சுப நேரம் 4.23-5.53 மணிவரை
இராகுகாலம் 11.53-1.23 மணிவரை
ஸ்லாமிய வருடப் பிறப்பு,

சுபமுகூர்த்த நாள்
சந்திராஷ்டமம்:கேட்டை, மூலம்

வளவன்

**மேஷம்** கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், பயணங்களால் பலனுண்டு, விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், குடும்பத்தினர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும், நினைத்த காரியம் நிறைவேறும் வாய்ப்புண்டு, விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**ரிஷபம்** பொதுவாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாடு குதூகலம் தரும்.

**சிம்மம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர் பயணமொன்று உருவாகும், தேவையற்ற மனக்குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**கன்னி** வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறும், செல்வநிலை உயரும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**தனுசு** தொழிலில் போட்டிகள் அதிகரிக்கலாம், பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், எதையும் சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**மீனம்** புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும்.

அழிவுக்கு முன்னால் ஆணவம் வரும். வீழ்ச்சிக்கு முன் திமிர் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தரிசனம் 02 XXV

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்

புருசோத்தமன்



(நேற்றைய தொடர்ச்சி)

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலயம் தொடர்பில் எழுந்த சர்ச்சை நீதிமன்றுக்குச் சென்ற போது, பிள்ளையார் ஆலயத்தை அமைப்பதற்கான இடத்தை கன்னியா வெந்நீரூற்று வளாகத்தில் ஒதுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வாதிட்டார் என்பதும் அதனை அவர் இலவசமாகவே செய்து முடித்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் நீதிமன்றம் இடத்தை ஒதுக்குவதற்கான தீர்ப்பை வழங்கிய போதி லும் இன்னமும் அங்கு பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறவில்லை.

### வெடுக்குநாறி சிவன் ஆலயம்

இதேபோன்று தான் வவுனியா வெடுக்குநாறி மலையில் உள்ள சிவன் ஆலயத்தின் வழிபாட்டிற்கும் தொல்லியல் திணைக்களம் ஊறு விளைவித்தமை யாவரும் அறிந்ததே.

வெடுக்குநாறி மலையானது தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உட்பட்டதென்ற அடிப்படையில், தொல்லியல் திணைக்களம் அங்கு மூக்கை நுழைத்துள்ளது.

காலாகாலமாக பூசை வழிபாடுகள் இடம்பெற்ற வெடுக்குநாறி மலையில் பொங்கல் செய்து வழிபாடாற்றுவதற்கு தொல்லியல் திணைக்களம் தடைவிதித்தது.

கூடவே வெடுக்குநாறி மலையில் பூசை வழிபாடுகளை நடத்த முற்பட்டவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

இங்குள்ள விக்கிரகங்களை இனந்தெரியாதவர்கள் உடைத்தனர்.

ஏலவே கூறிய குருந்தூர் மலை மற்றும் கன்னியா வெந்நீரூற்றுப் போல, வவுனியா வெடுக்குநாறி மலை விவகாரமும் நீதிமன்றுக்குச் சென்றது.

காலாகாலமாக நடந்த பொங்கல் வழிபாடுகளைத் தடுக்க முடியாதெனும் அடிப்படையில் அங்கு பொங்கல் செய்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இருந்தும் நிலத்தில் நெரு ப்புப் படாதவாறு பொங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கடும் நிபந்தனைகளை விதித்த தொல்லியல் திணைக்களம், தன்னை ஒரு சிங்களப் பேரினவாத அமைப்பாகக் காட்டிக் கொண்டது.

எனினும் அப்பகுதி மக்களின் கடும் பிரயத்தனம் காரணமாகவும் சிவபூமி அறக் கட்டளையின் கடும் முயற்சி காரணமாகவும் வெடுக்குநாறி மலையில் தெய்வ விக்கிரகங்கள் மீளவும் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

ஆயினும் அந்த ஆலயத்தின் பூசகர்கள் மீதான வழக்கு இன்னமும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனங்களும் என்ற இத்தரிசனம் இதுகாலும் சைவ சமயத்திற்கு அந்நியர்களாலும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தாலும் இழைக்கப்பட்ட அநீதி பற்றி பிரஸ்தாபித்திருந்தது.

ஆனால் ஈழத்தின் சைவ சமயம் மதமாற்றிகளாலும் ஆலய பரிபாலன சபைகளாலும் பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்வது குறித்து இவ்விடத்தில் பிரஸ்தாபிப்பது கட்டாயமாகிறது.

ஆம், ஈழவளநாடு சிவபூமி எனப் போற்றப்படும் திருநாடு. மிகச்சிறந்த சிவபக்தனாகிய இராவணேஸ்வரன் இந்த நாட்டை ஆட்சி செய்தான் என்பதான விடயங்களை முன்னைய அத்தியாயங்களில் கண்டோம்.

அதேநேரம் கௌதம புத்த பிரான் இந்து சமயத்தவர் என்ற உண்மையையும் நாம் இங்கு கூறியாக வேண்டும்.

அதாவது பௌத்த மதத்தின் தோற்றுவாய் இந்து மதம் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

அதிலும் 'பௌத்தத்தை ஒரு மதமாக ஆய்வாளர்கள் கருதவில்லை. உண்மையில் பௌத் தம் என்பது ஒரு தத்துவமே. ஆனாலும் ஒரு தத்துவம் மதமாகிவிட்டது. அதற்கான மதபீடங்கள் வலிமையுடன் உள்ளன.


அதேநேரம் பௌத்த விகாரைகளில் விநாயகர், இலக்குமி, காளி, கிருஷ்ணபரமாத்மா ஆகிய தெய்வங்கள் பரிவாரங்களாக வைக்கப்பட்டு வழிபாடாற்றப்படுகின்றன.

இதற்கும் மேலாக, முருக வழிபாட்டில் பௌத்த சிங்களவர்கள் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

கதிர்காமம் முருகன் ஆலயத்தில் பூசை செய்கின்றவர் களைக் கப்புராளை என்று அழைக்கின்றனர். இவர்கள் சிங்களவர்கள் என்பது இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

ஒரு காலத்தில் கதிர்காமக் கந்தன் ஆலய பரிபாலனம் நம் தமிழ் மக்களிடம் இருந்ததாயினும் சில சூழல்கள் காரணமாக கதிர்காமக் கந்தனை சிங்களவர்கள் தத்தெடுத்துக் கொண்டனர்.

இவ்வாறு பௌத்த சிங்களவர்கள் கதிர்காமத்து முருகன் ஆலயத்தை நிர் வகிப்ப தென்பது அவர்கள் சைவ வழிபாட்டை அங்கீகரிப்பதாக-ஏற்றுக்கொள்வதாக அமைகிறது.



ஆக, இந்து-பௌத்த மதங்கள் ஒரு நேர்கோட்டில் உள்ளவை. அவை கொல்லாமை, புலால் உண்ணாமை எனும் அறத்தை வலியுறுத்துகின்றன.

பாவபழிகளை இரண்டு சமயங்களும் நம்புகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, ஊழ்வினைப் பயனை ஏற்றுக் கொள்கின்றன.

ஒட்டுமொத்தத்தில் இந்து பௌத்த சமயங்கள் என்பன ஒன்றில் இருந்து ஒன்று விலக முடியாதவை. அதிலும் இரண்டு சமயங்களும் கொண்ட கொள்கைகள் ஒன் றாக உள்ளன.

மேலும் இந்து சமயமோ அன்றிப் பௌத்தமோ மத மாற்றம் பற்றி இம்மியும் சிந்தித்ததில்லை.

அவரவர் சமயங்களை அவரவர் பின்பற்றுவதை மேற்குறித்த இரண்டு சமயங்களும் நூறு வீதம் அங்கீகரிக்கின்றன.

அதே நேரம் எம் நாட்டில் உள்ள கிறிஸ்தவமும் இஸ்லாமும் மதமாற்றத்தில் தீவிரம் காட்டுகின்றன.

இவற்றின் ஆதிக்கம் சைவ சமயம் என்ற எல்லை கடந்து, பௌத்தத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள் ளது.

அதேநேரம் கத்தோலிக்கர்களை கிறிஸ்தவ சபைகள் தங்களின் பக்கம் வரவழைக்கின்றனவாயினும் அஃது கொள்கை-கோட்பாடு-நம்பிக்கை சார்ந்த வேறுபாடேயன்றி மற்றும்படி இயேசு பிரானே அவர்களின் வழிபடு தெய்வமாக உள்ளார்.

அவர்களுக்குள் நடக்கி ன்ற மத மாற்றம் என்பது பிதாவை-சுதனை-பரிசுத்த ஆவியை வழிபாடாற்றுகின்ற வித்தியாசத்தில் மட்டுமே தங்கியுள்ளது.

அதன்காரணமாக கத்தோலிக்க-கிறிஸ்தவ மதங்களுக்குக்கிடையே முரண்பாடுகளோ அன்றி பேதங்களோ ஏற்படுவதில்லை ஏற்படப் போவதுமில்லை.

ஆனால் இந்து சமயப் பின்னணியைக் கொண்ட பௌத்தர்கள் எதற்காக சைவ சமயத்துடன் மோது கின்றனர். சைவ சமயத்தவர்கள் எதற்காக பௌத்த விகாரைகளை எதிர்க்கின்றனர் என்பது பற்றி ஆராய்வது இங்கு அவசியமான விடயமாகிறது.

(திங்கள் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் 5 ஆம் 6 ஆம் : உலக சூழல் தினமும் உலக பனை தினமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

ஜூன் 5 ஆம் 6 ஆம் முக்கியமான இரு உலக தினங்களை மையப்படுத்தியிருப்பது அவற்றின் அவசியத்தை எம்மால் உணர்வு பூர்வமாக நிச்சயமாக உணர்ந்தறியக் கூடியதாக இருந்தாலும் அவசியம் அதனைப்பற்றி கலந்துரையாடப்பட வேண்டியதுமாகும். இத்தினங்களுக்கான மகிமை என்றும் அளப்பரியது. நாம் அவற்றிற்கான முக்கியத்துவத்தை அவசியம் கொடுத்தே ஆகவேண்டும்.

நடைபெற்று முடிந்த இத்தினங்களுக்கான கொண்டாட்டங்களை கூர்ந்தவதானித்தால் அவற்றினது மகிமையை வெறுமனே பேசிக் கொண்டே இருக்காது அவையொட்டிய நிகழ்வுகளையும் நடத்துதல் மக்களிடையே மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்திவிடும். அதுவும் வடமாகாணத்து செயலணிகளின் வியத்தகு செயற்பாடாக இத்தினங்கள் கொண்டாடப்பட்டிருக்கின்றன.

கொண்டாடப்படவுமிருக்கின்றன. முன்னையது நாம் வாழும் சூழல் பற்றியது. பின்னையது வடகிழக்கு மாகாணங்களின் அடையாளமாக கருதப் படும் கற்பகதருவாகும். நாம் வாழும் சூழலுக்கும் அதில் வாழும் பல்லாண்டு தாவரமான பனை மரத்தைப் பற்றியதாகும்.

எமது பாரம்பரியத்தின் சொத்துக்கள் பற்றியும் பண்டைய வாழ்க்கைமுறைமை பற்றியும் தமிழின் ஆளுமை பற்றியும் ஆய்ந்து தேடியறியும் இளவல் மார்ன் அல்போன்ஸ் அமல்ராஜின் (Maryn Alphons Amalraj) தேடலில் இன்னும் கலப்பினமில்லாது தனித்துவமாக உயர்ந்து நிற்கும் தாவரமாக விருட்சமாக பனையை காணலாம். முன்பு பாமே (Palmae) என்னும் தாவர குடும்பத்திலும் தற்போது அரிக்கேசியே (Arecaceae) என பெயர்மாற்றிக் கொண்ட குடும்பத்திலும் உள்ள மூவரைப் பற்றி நாம் அவசியம் கணக்கிலெடுக்க வேண்டும்.


பனை, தென்னை மற்றும் கமுகு (பாக்கு) மரங்கள் இக்குடும்பத்தின் சிறப்புக்குரியவர்கள். அண்ணன் தம்பியாக இருந்தாலும் மூவரிலும் பலத்த வேறுபாடுகள், இயல்புகள், தனித்துவ தன்மைகள். இம் மூவரிலும் தென்னை மரத்திற்குள்ள தகைமையை மற்றையவர்களுக்கு வழங்கப்படவில்லை என்னும் குறையும் இன்னமும் நம்மவரிடையே தொக்கிநிற்கின்றது.

பயன்பாட்டில் கூட தென்னைக்கு வழங்கப்பட்ட அதீத அந்தஸ்து பனைக்கும் கமுகுக்கும் வழங்கப்பட வில்லை. ஏ 9 பாதையில் உசன் தொடங்கி இயக்கச்சி வரை சாலையினருகே உள்ள நிலங்களில் அண்ணனான பனையை பெக்கோ கொண்டு பிடுங்கி ஒதுக்கி எரித்துவிட்டு தம்பியான தென்னையை நடுகை செய்த நம்மவர்கள் அண்ணனின் தனித்துவத்தை அளந்தறிய வில்லை.

தென்னையில் முக்கிய பயன்பாட்டுப் பொருளாக உள்ள தேங்காய் மனைகளின் பயன்பாட்டில் தினமும் முக்கிய பொருளாகிவிட்டதால் அத்துணை சிறப்பு ஏற்பாடு. மாறாக பனைமரத்துக்கான உயரிய அந்தஸ்து இன்னமும் வழங்கப்படவில்லை என்பது கவலைதரும் விடயமாகும்.

பனை அபிவிருத்திச் சபை மற்றும் பனை ஆராய்ச்சி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு செயற்பட்டுவரும் நிலையிலும் இந்த எதிர்பார்த்திருக்கும் மாற்றங்கள் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை. கற்பகத்தருவினை மையப்படுத்திய நிறுவன செயற்பாடுகள் ஆரம்பித்து பல்லாண்டுகள் கடந்த நிலையில் இன்னமும் அதற்கான முக்கியத்துவத்தை மக்களும் கொடுக்க

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



வில்லை. பலருடைய வாழ்வியலுக்கான அடிப்படை உற்பத்தி பொருட்களாக பனைசார் பொருட்களே அமைகின்றன. ஆனால் அவற்றின் கேள்வி அதிகமாக இல்லாதிருப்பதனால் பயன்பாடும் குறைவாயிருப்பதனால் இதனாலான குடும்ப வருமானமும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கின்றது.

வடபுலத்தில் எமது வாழ்க்கை முறை பனைசார் வாழ்வியலாகும் என்பதில் மாற்றுக் கருத்தேதுமில்லை. எமது சூழலும் பனை சார் சூழல் தொகுதியாகவே - ஒரு பல்லாண்டு விருட்சத்தின் அடியொற்றிய வாழ்க்கையாகவே - இருந்தது இருந்து கொண்டுமிருக்கின்றது. கற்பகதருவின் பயன்பாடுகளை அதற்கான அந்தஸ்தை எமது வாழ்க்கையோடு நாம் ஒன்றிணைத்து வாழ்ந்து பார்க்கவேண்டும்.

தற்போதிருக்கின்ற சூழலில் முக்கியமாக உள்ள தொற்றா நோய்களில் கற்பக தருவின் உணவுகள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை. சிறுவயதில் பனம்பழமும் பனங்கிழங்கும் நொங்கும் இளங்குருத்தும் பனாட்டும் பூரானும் எமது உணவுக்குள் இரண்டற கலந்திருந்தது.

அந்த வயதிலேயே நார்ச்சத்துள்ள உணவில் சிறந்ததான பனங்கிழங்கு வெய்யிலில் காய்ந்து அப்படியே ஒடியலாகவும் மற்றும் அதனை அவித்து புளுக்கொடியலாகவும் உண்ட காலங்கள் இயற்கைவழி வாழ்வை இலகுவாக எடுத்துச் காட்டியது.

தற்போது இதற்காக கூட்டம் கூடி அதன் அருமை பெருமைகளை எடுத்துக் கூறினாலும் கூட்டம் கலைந்ததோடு சரி அதற்குப் பிறகு அதைப் பற்றி பேச்சோ அல்லது செயற்பாடோ இல்லாமலே போய்விட்டது. பனை சார் பொருட்கள் உணவாகினும் சரி வேறு பயன்பாடுள்ள பொருட்களாகினும் சரி அவை தற்கால வாழ்விற்கு "ஸ்ரைல்" ஆக இல்லை என்பதே அனைவரினதும் குறைபாடு. பிளாஸ்ரிக்கும் அலுமினியமும் கறுப்பு கலவை பூசிய வகை வகையான ஒட்டாத சட்டிகளும் தான் தற்போது அதிகம் கேள்வியுள்ளவையாக அதிக விலையுடனாக பாவனையிலிருக்கின்றன.

இவற்றினால் மனிதனுக்கும் எமது சூழலுக் கும் ஏற்படும் பாதிப்பு அதிகம். இருந்தும் மக்களின் பயன்பாட்டிலிருந்து விலக்க முடியவில்லை.

மக்கள் உயிர்காக்கும் காத்த கற்பகதருவின் எண்ணிக்கையை குறிப்பாக வடபுலத்திலிருக்கின்ற தரிசு நிலங்கள் மற்றும் பயன்பாடில்லாது இருக்கும் நிலங்களில் நடுகை செய்து எதிர்காலத்திற்கான பனைவளத்தை பெருக்கும் நற்காரியத்தில் அனைவரும் ஈடுபட வேண்டும்.

" ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" பாடலும் பனைமரத்து ஊஞ்சலும் முன்னைய காலத்தில் முதியவர்கள் உள்ள வீடுகளில் அறுசுவையுடனான அரிசிமா கொழுக்கட்டையும் பனங்கட்டியும் அரிசிமாவுடன் தேங்காய் சொட்டும் கலந்த கூழும் - அதனை உண்ட வர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்றே கூறலாம்.

மன ஆறுதலுக்காக கிராமத்துக்கு சென்று அங்கு இந்த வகையான உணவுகளை உண்டு மகிழ்ந்து கலந்து பேசி சிரித்து ஓடியாடி விளையாடி வாழ்ந்த காலங்களை தற்கால இளஞ் சமூகத்திற்கு செய்து காட்டும் வழி வகைகளில் ஈடுபடுவது மிகவும் அவசியம்.

பனைசார் சூழலின் சுகாதாரமான தன்மையை அந்த இளங்காற்றை சுவாசிக்க அனை வருக்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஓடியோடி உழைத்து விட்டு ஆறுதலடைய விரும்பும் எவருக்கும் கிராமத்து இந்த சுவாத்தியம் அவசியம் மன ஆறுதலையும் நெருடலையும் இன்னமும் ஒற்றுமையையும் கற்பிக்கும் பாடசாலையாகும்.

பணம் புகழ் வசதியான வாழ்க்கை எதுவிருந்தாலும் நிம்மதியை தொலைத்து விட்டு ஒருவகையில் நடைபிண மாகவே வாழ்ந்துவிடுகின்றோம். பிள்ளைகளுக்கு அலைபேசியை பயன்படுத்துவதை நிறுத்தி வாழ்க்கையின் ஒன்றிணைதலை ஒற்றுமையை மனிதத் தன்மையை கற்பிக்கும் கிராமத்து வாழ்க்கையை கற்றுக்கொள்ள வாய்ப்பளியுங்கள்.

கிராமங்கள் தொழில் நுட்பமையங்களாக மாறும் காலம் வெகு தொலைவிலில்லை. அனைத்தையும் வாய்ப்புக்களை வசதிகளை பெருக்குவதாக நினை த்துக் கொண்டு எமது மகிழ்ச்சியை அந்த அளவில்லாத சந்தோசத்தை நாம் தொலைக்க முற்பட்டிருக்கின்றோம்.

ஒருவரது உளநலம் சார்ந்து சிந்தித்தால் இவையனைத்துக்குமான விடை கிடைத்துவிடும். பனைசார் சூழல் வாழ்க்கையை நகர்ப்புறமாயினும் வாழ்வதற்கான வாய்ப்புக்களை இன்னமும் நாம் பெருக்கிக் கொள்ளலாம். உயிர்வேலிகளை சீமெந்து மதில்களாக மாற்றாதீர்கள். சீமெந்து மதில்களுக்கு என்னதான் வர்ணம் பூசினாலும் உயிரும் வராது உணவும் தராது.

இந்த தினங்களை நாம் ஆத்மாத்தமாக கொண்டாட வேண்டும். அனைவரினதும் மகிழ்ச்சியான வாழ்வுக்கு எமது பாரம்பரிய முறைகளுக்குள் தற்சார்பு வாழ்க்கை நடைமுறைகளுக்குள் உள்வாங்கப்படுவதே அனைவருக்குமான தீர்வாக அது அமையும்.

எமது கலை கலாசாரம் வாழ்க்கை முறை பண்பாடு அனைத்தும் இந்த அழகான சூழல் தொகுதிக்குள் அடக்கம் என்பதனை நாம் உணரும் வரை எமக்கான விடிவில்லை என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும். எமது தனித்துவத்தை நாம் இழக்காதவரை பனைசார் வாழ்வியல் எம் வாழ்வை மேம்படுத்திக் கொண்டே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பட்டுத் தெளிவதை விட
சிறந்த பாடம் எதுவுமில்லை.
- அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## விசாரணை நகர்வுகளில் நிதானம் தெரிகிறது...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் என்பது இந்த நாட்டில் மக்கள் புரட்சி ஏற்பட்டதன் பின்பாக அமையப்பெற்றதாகும்.

ஆம், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது இந்த நாட்டில் பெரும் மக்கள் புரட்சி வெடித்தது.

ஜனாதிபதி மாளிகையை மக்கள் சூழ்ந்து கொண்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ படைத் தரப்பின் உதவியோடு நாட்டை விட்டுத் தப்பியோடினார்.

தவிர, அவரை உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளவும் மறுத்தன.

இதன் காரணமாக சில நாடுகளுக்கிடையே அவர் பயணம் மேற்கொண்டு அடைக்கலம் தேட வேண்டியவரானார்.

இந்தப் பின்னணிகள் அத்தனைக்கும் மூலகாரணம் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர்.

ஆனாலும் அரசாங்கத்திற்கு எதிரான புரட்சி என்பது நாட்டின் பொருளாதார வீழ்ச்சி, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஊழல், மக்களின் வறுமை என்பன காரணமாக ஏற்பட்டதாகவே முன்மொழியப்பட்டது.

குறித்த விவகாரமும் மக்கள் புரட்சிக்கான காரணமாக இருந்த போதிலும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் உண்மைத் தன்மையை மக்கள் அறிந்த போது எழுந்ததுதான் அரகல போராட்டம்.

எனினும் சமகால அமைதிச்சூழலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பு அரகலப் போராட்டத்தை மறந்து விட்டது போல் அறிக்கைகளை வெளியிடுகிறது.

நாட்டை எங்களிடம் தாருங்கள். நாங்கள் நடத்திக் காட்டுகின்றோம். பொதுஜன பெரமுன வலிமையான சக்தியுடன் இருக்கிறது என்றவாறு மகிந்த ராஜபக்ஷ அண்மையில் கூறியிருந்தார்.

இவ்வாறு மகிந்த ராஜபக்ஷ கூறுவதற்கு முன்னதாக, அவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு முன் தோன்றி, வாக்குமூலம் கொடுத்திருந்தார் என்பதும் ஏலவே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நீதிமன்றம் பயணத்தடை விதித்திருப்பதும் வேறுகதை.

ஆக, தங்கள் மீதான மக்களின் எதிர்ப்பு வலுக்குறைந்து விட்டதாக மகிந்த தரப்பு கருதுகிறது.

ஆனால் மக்கள் தரப்போ மகிந்த தரப்பை ஆட்சிப் பீடத்தில் இருந்து அகற்றிவிட்டோம். ஊழல் மோசடிகளை முற்றற நீக்கவல்ல ஆட்சியை – அரசாங்கத்தை அமைத்துவிட்டோம். இனி யார் கூப்பாடு போட்டாலும் அது காட்டுக்கத்தல் மட்டுமே.

மற்றும்படி கடந்தகால கொலைக் குற்றச்சாட்டுக்கள், ஊழல் மோசடிகள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்கள் என அனைத்திலும் விசாரணைகள் முறையாக நடக்கின்றன. கைதுகளுக்கும் குறைவில்லை.

கூடவே வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ள குற்றவாளிகளுக்கும் சரியான வலை விரிப்பு.

இவற்றின் மத்தியில் விரைவில் சம்பந்தப்பட்டவர்கள் நீதியின் தீர்ப்பைப் பெறுவர் என்ற பரிபூரண நம்பிக்கையில் நாட்டு மக்கள்.

# எல் நினோ காலநிலை மாற்றம் எதிர்கொள்ளத் தயாராகும் அரசு

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ள எல் நினோ காலநிலை நிலைமை குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதுடன், அதற்கு முகம்கொடுப்பதற்கான திட்டங்களை வகுத்துவருவதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று (16) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

ஜனாதிபதியின் தலைமையில் இது தொடர்பாக பல சுற்று விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளன.

அரசாங்கம் என்ற ரீதியில் இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து குறிப்பாக விவசாயம் உள்ளிட்ட உணவு உற்பத்தி மற்றும் நமது நீர் வளங்கள் போன்ற பல துறைகள் குறித்து ஏற்கெனவே அவதானம் செலுத்தியுள்ளோம்.

குறிப்பாக அடுத்த போக விவசாயச் செய்கையின் போது இந்த நிலைமைக்கு எவ்வாறு முகம்கொடுப்பது என்பது குறித்து ஆராயப்படுகிறது. ஏனெனில் வளிமண்டலவியல் திணைக்களம் உள்ளிட்ட இது சார்ந்த குழுக்கள் இந்த சாத்தியமான நிலைமை குறித்து சில எதிர்வுகூறல்களை வெளியிட்டுள்ளன.

இவற்றையும் கருத்திற்கொண்டே எதிர்காலத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இதன் பாதிப்பைக் குறைத்து தேவையான முன்னாயத்த நடவடிக்கைகளை உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கே நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றார்.

இதேவேளை எல் நினோ கால நிலையை எதிர்கொள்வதற்கு உணவுப் பாதுகாப்பு, நீர் முகாமைத்துவம் மற்றும் வலுசக்தி முகாமைத்துவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டச் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்ற கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது எதிர்காலத்தில் ஏற்படவுள்ள எல் நினோ காலநிலை மாற்றத்தினால் நாட்டிற்கு ஏற்படக்கூடிய நேரடி பாதிப்புகள் மற்றும் உலகளாவிய தாக்கங்களுக்குத் தயாராக வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டிய பிரதமர்; உணவுப் பாதுகாப்பு, நீர் முகாமைத்துவம், வலுசக்தி முகாமைத்துவம் மற்றும் வலுசக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். (ம-7)

## சிறுவனைத் துன்புறுத்திய ஒருவர் அதிரடிக் கைது

(ஏறாவூர்)

ஏறாவூர் சவுக்கடி தளவாய் பகுதியில் 16 வயதுச் சிறுவனைக் கடத்திச் சென்று கொடூரமாக தாக்கிய சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறுவனைக் கடத்தி மரத்தில் தலைகீழாக கட்டி தாக்கிய காணொளி சமூக ஊடகங்களில் வெளியானதை அடுத்து குறித்த சிறுவனின் தாயார் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த காணொளி ஆதாரத்தின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவர் தலைமறைவாகியுள்ள நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## ஹேமரத்தன தேரரிடம் டி.என்.ஏ பரிசோதனை

(கொழும்பு)

சிறுமி ஒருவரைப் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் அட்டமஸ்தானாதிபதி பல்லேகம ஹேமரத்தன தேரரிடம் டி.என்.ஏ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறத்த பரிசோதனையானது நேற்று (16) கொழும்பிலுள்ள அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கொந்தளிப்புடன் கடல் காற்றின் வேகமும் உயர்வு

(கொழும்பு)

காலி முதல் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 50 - 60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்பதுடன் அக்கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதேவேளை கற்பிட்டி முதல் கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் கடல் அலைகளின் உயரம் சுமார் 2.0 - 2.5 மீற்றர் வரை உயரக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கல்வி நிறுவனங்களில் நாளை டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகள், முன்பள்ளிகள் உள்ளடங்கலாக சகல கல்வி நிறுவனங்களிலும் நாளை 18ம் திகதி விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுகுறித்து அனைத்து மாகாண கல்வி அதிகாரிகளுக்கும் விசேட சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ள கல்வி அமைச்சு, பல விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நுளம்புகள் பெருகும் இடங்களை இனங்கண்டு அழிப்பதற்கும், சமூக பங்களிப்புடன் கூடிய துப்பரவாக்கல் மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறும் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## விபரீத முடிவெடுத்து இளைஞன் உயிரிழப்பு

### சங்கானையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பகுதியில் விபரீத முடிவெடுத்து, இளைஞன் ஒருவர் கிணற்றில் பாய்ந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று (16) செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இளைஞனின் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆனி மாத இராசி பலன்கள் (15.06.2026 - 16.07.2026வரை)

## விரய குருவால் சுப விரயம்!



**சிம்ம இராசி வாசகர்களே!**

பராபவவருடம் ஆனிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது. மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் சூரியன். இலாபஸ்தானத்தில் லாபாதிபதி புதனோடு இணைந்து சஞ்ச ரிக்கிறார். எனவே இலாபம் வருவதில் எந்த தடையும் இருக்காது. அதேநேரம் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் நடை பெறுவதால். வந்த தொகை மறுநொடியே செலவாகிவிடும். உடல்நலத்திற்காகவும் சிறுதொகையை செலவிடும் சூழல் ஏற் படும்.

வீண் விரயங்களில் இருந்து விடுபட. சுபவிரயங்களை மேற்கொள்ளுங்கள். இராசிக்கு யோகாதிபதியான செவ்வாய். மாதத் தொடக்கத்தில் தொழில் ஸ்தா னத்திற்கு வரப்போகிறார். எனவே மூடிக் கிடந்த தொழிலுக்கு திறப்பு விழா நடத்தும் வாய்ப்பு உண்டு.

**ரிஷப - செவ்வாய்**

ஆனிமாதம் 5 ஆம் திகதி (19.6.2026) அன்று ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், செவ்வாய். சுக ஸ்தானம் மற்றும் பாக்கிய ஸ்தானத் திற்கு அதிபதியான அவர். தொழில் ஸ்தானத்திற்கு வருவது யோகம் தான். தொழில் வெற்றி நடைபோடும் வரவேண்டிய இலாபம் வந்துசேரும். கூட்டுத் தொழிலில் பழைய பங்குதா ரர்களை விலக்கி விட்டு. புதிய பங்குதா களை சேர்த்துக்கொள்வது பற்றி சிந்திப்பர். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் நடை பெறுவதால் கடன் சுமை அதிகரிக்கக்கூடும். ஒரு சிலருக்கு உத்தி யோகத்தில் புதிய பொறுப்புக் கிடைக்கலாம். உடன் பிறப்புகளின் இல்லத்தில் நடை பெறும் சுபநிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி ஸ்வைப்பீர்கள்

**சிம்ம-சுக்ரன்**

கடக இராசியில் சஞ்சரிக்கும் சுக்ரன், ஆனி 21 ஆம் திகதி (05.07.2026) அன்று உங்கள் இராசிக்கு வருகிறார். உங்கள் இராசிக்கு 3. 10 ஆகிய இடங்களுக்கு அதிப தியானவர் சுக்ரன். அவர் உங்கள் இராசியில் அடியெடுத்து வைக்கும் வேளை யில். எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக் கும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும். கொடுத்த வாக்கை காப்பாற்று வீர்கள். ஆடை. ஆபரணச் சேர்க்கை. உண்டு. பெண் வழிப் பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். உடன்பிறப்புகள் வழி யில் நடைபெற்ற பஞ்சாயத்துக்கள் சாதகமாக அமையும்.

**சனி வக்ரம்**

ஆனி 31ஆம் திகதி (15.7.2026) அன்று மீன இராசியில் சனி வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 6,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அவர் வக்ரம் பெறும் இந்த நேரத்தில் ஒரு சில நன்மைகளும், சில மனக்கசப்பான நிகழ்வுகளும் நடைபெறலாம். சனியின்




மீது குருவின் பார்வை பதிவதால் பெரிய அளவில் பாதிப்புகள் வராது. இருப்பினும் உத்தியோக மாற்றமும், ஊர் மாற்றமும் வரலாம்.

உங்கள் இராசிக்கு 2. 5. 10 ஆகிய இடங்களில் சனியின் பார்வை பதிகிறது. எனவே குடும்பத்தில் செலவுகள் கூடுதலாக இருக்கும். விருந்தினர் வருகை உண்டு.வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளின் கல்யாண முயற்சியும். வேலைவாய்ப்புக்காக எடுத்த முயற்சியும் கைகூடும். வெளிநாட்டு வணிகம் ஆதாயம் தரும். உத்தியோகத் தில் இடமாற்றம், இலாகா மாற்றம் உறுதியாகலாம். உயர் அதிகாரிகளால் நன்மை கிடைக்கும். சனிக்கிழமை விரதமும், வழிபாடும் சகஜ நிலையை உருவாக்கும்.

பொதுவாழ்வில் உள்ளவர்கள். மேலிடத்தில் ஒப்படைத்த பொறுப்புகளை கவனமாகச் செய்வது நல்லது. வியாபாரத் தில் வாடிக்கையாளர்களின் எண் ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேல் அதிகாரிகள் இணக்கமாக நடந்துகொள்வர். கலைஞர்களுக்கு புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மாணவ - மாணவிகளுக்கு கல்வியில் அக்கறை கூடும். பெண்களுக்கு சுபச்செலவுகள் அதிகரிக்கும். எதிர்மறை சிந்தனைகளைத் தவிர்ப்பது நல்லது.

இம்மாதம் சூரிய வழிபாடு சுகத்தை கொடுக்கும். பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:-

**ஜூன்: 16, 17, 22, 23, 26, 27, ஜூலை: 9, 10, 11, 13, 14.**

**மகிழ்ச்சி தரும் வண்ணம்:- பச்சை.**

**குரு - சுக்ரன் சேர்க்கை**

கடக இராசியில் உச்சம் பெற்ற குருவோடு. 15.6.2026 முதல் 4.7.2026 வரை சுக்ரன் இணைந்து சஞ்சரிக்கப்போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. திடீர் விரயங்கள், தேவையற்ற வாக்குவாதம். மனக்கசப்பு தரும் தகவல். மருத்துவச் செலவு அதி கரிப்பு, பண நெருக்கடிகளை சந்திக்கும் நேரம் இது. என்ன இருந்தாலும் பொறுமையும், நிதானமும் தேவை. பொது நலத்தில் இருப்பவர்கள் வீண் பழிக்கு ஆளாக நேரிடும். மொத்தத்தில் நினைத்தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக இருக்கும்.

ஜோதிடக் கலைமணி
சிவல்புரி சிங்காரம்



**கன்னி இராசி வாசகர்களே!**

பராபவ வருட ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் புதன் தொழில் ஸ்தானத தில் சூரியனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே புத ஆதித்ய யோகம் உருவாகிறது. இதனால் பொருளாதார நிலை உயரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எதிர்காலத்தை பற்றிய பயம் விலகும். இலாபகுருவின் ஆதிக்கத்தால் இலாபம் வந்து கொண்டேயிருக்கும். புதிய பங்குதாரர்கள் இணைந்து. பொருள் வளம் பெருக வழிவகுத்துக்கொடுப்பர். ஆரோக்கியத் தொல்லை அகலும். உற்சா கத்தோடு செயற்படுவீர்கள். அஷ்டமத்து செவ்வாய் மாறிய பிறகு மன நிம்மதி அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு திருப்தி தரும்.

**ரிஷப - செவ்வாய்**

ஆனி மாதம் 5ஆம் திகதி (19.6.2026) அன்று செவ்வாய். ரிஷப இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3. 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் பாக்கிய ஸ்தானத்திற்கு செல்லும்போது இடம். பூமியால் இலாபம் கிடைக்கும். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். "கடன் சுமையின் காரணமாக வாங்கிய இடத்தை விற்று விட்டோமே" என்று கவலைப்பட்டவர்களுக்கு. புதிய இடம் வாங்கும் யோகம் உண்டு. பல நாட்களாக நடைபெற்ற பஞ்சாயத்து நல்ல முடிவிற்கு வரும். செவ்வாய் ரிஷபத்தில் சஞ்சரிக்கும்போது இதுவரை நடைபெறாத காரியங்கள் படிப்படியாக நடைபெறும். துணிவும். தன்னம்பிக்கையும் கூடும். நேர்மறைச் சிந்தனைகளை வளர்த்துக் கொண்டால். உங்களின் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும்.

## இலாப குருவால் இலாபம்!

**சிம்ம-சுக்ரன்**

கடக இராசியில் சஞ்சரிக்கும் சுக்ரன். ஆனி 21 ஆம் திகதி (5.7.2026) அன்று சிம்ம இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கு 2,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் விரய ஸ்தானத்திற்கு வருவதால் விரயங்கள் கூடும். குடும்ப முன்னேற்றம் கருதி அத்தியாவசியப் பொருட்களையும். ஆடம்பர பொருட்களையும் வாங்குவதில் மகிழ்ச்சி காண்பீர்கள். பெற்றோரின் உடல்நலத்தில் கவனம் தேவை. வாகன யோகம் உண்டு. தேவைகளைப் பூர்த்தி செய்வர். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும். உங்கள் இராசிக்கு 1. 4. 9 ஆகிய இடங்களில் சனியின் பார்வை பதிகிறது. அதேபோல் குருவின் பார்வை சனி மீது பதிவதால். சனி பகவானின் கடுமை குறைந்து. நன்மைகள் அதிகரிக்கும். குறிப்பாக குடும்ப ஒற்றுமை பலப்படும். உடன்பிறந்தவர்களின் திருமண காரியம் கைகூடும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. வெளிநாடு சென்று படிக்க விரும்பிய பிள்ளைகளுக்காக எடுத்த முயற்சி பயணங்கள் பலன் தருவதாக அமையும்.

**சனி வக்ரம்.**

ஆனி 31ஆம் திகதி (15.7.2026) அன்று மீன இராசியில் சனிவக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 5. 6 ஆகிய இடங்க ளுக்கு அதிபதியான சனி, வக்ரம் பெறுவது ஒரு வகையில் நன்மைதான். 6ஆம் இடத்திற்கு அதிபதியானவர் வக்ரம் பெறுவ தால் எதிரிகளின் தொல்லை குறையும். இலாப நோக்கத்தோடு பழகியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். உத்தியோ கத்தில் உயர் அதிகாரிகள் உங்கள்




நிறைவேறும். உத்தியோகத்தில் வரும் இடமாற்றம் இனிமை தரும் விதத்தில் அமையும். அரசியல் களத்தில் இருப்பவர் களுக்கு திடீரென நல்ல பொறுப்புகள் வந்து சேரும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வியா பாரம் மற்றும் தொழில் செய்பவர்களுக்கு நிலையான வருமானமும். நிதிநிலையில் ஆதரவும் கிடைக்கும். கலைஞர்களுக்கு எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு. மாணவ-மாணவிகளுக்கு போட்டி பந்த யங்களில் வெற்றி கிடைக்கும். பெண்க ளுக்கு ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அடிக்கடி பயணங்களும், அதனால் விரயங்களும் ஏற்படும்.

இம்மாதம் அனுமன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:- ஜூன்: 18, 19, 25, 26, 29, 30, ஜூலை: 11, 12, 15, 16. மகிழ்ச்சி தரும் வண்ணம்:- சிவப்பு.**

**குரு - சுக்ரன் சேர்க்கை**

கடக இராசியில் உச்சம் பெற்ற குருவோடு. 15.6.2026 முதல் 4.7.2026 வரை சுக்ரன் இணைந்து சஞ்சரிக்கிறார். தேவகுருவும். அசுரகுருவும் இணைந்து சஞ்சரிக்கும் நேரத்தில் நல்ல பலன்கள் கிடைக்கும். தனவரவு தாராளமாக வந்துசேரும். வெளிநாட்டில் இருந்து ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ள குறுக்கீடு அகலும். உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். பெற்றோர் வழி ஆதரவும், பிள்ளைகளால் உதிரி வருமானமும், வீடு வாங்கும் யோகமும். கல்யாண முயற்சியும் கைகூடும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சொத்து...

பொறுப்பு விபரப் பிரகடனங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த திகதிக்கு முன்னர் சொத்து மற்றும் பொறுப்பு விபரங்களைச் சமர்ப்பிக்கத் தவறுபவர்கள் கட்டாயமாக அபராதத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள் என அதன் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அந்த அபராதத் தொகை தாங்கிக் கொள்ள முடியாத மட்டத்திற்குப் பாரியதாக இருக்கும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நேற்று வெளியிட்ட விசேட அறிவிப்பிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 80(1) பிரிவின் கீழ், சொத்து மற்றும் பொறுப்பு விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய நபர்கள், உரிய ஆண்டின் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அந்தப் பிரகடனங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அதனைத் தாமதப்படுத்துவது அபராதம் மற்றும் நீதிமன்ற நடவடிக்கை ஆகியவற்றுக்கு வழிவகுக்கும் என்றும் பணிப்பாளர் எச்சரித்தார்.

குறித்த சொத்து மற்றும் பொறுப்பு விபரப் பிரகடனங்கள் மின்முறைமை ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த மத்தியமயப்படுத்தப்பட்ட மின் முறைமையானது கடந்த 2026 மார்ச் 31ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அத்துடன், இந்தப்பிரகடனங்களைப் பெற்றுக்கொள்வது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் பணியோ அல்லது பொறுப்போ அல்ல என்றும் இதுவொரு பிரஜையின் பொறுப்பு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

2023 ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் படி, சொத்து மற்றும் பொறுப்பு விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய புதிய அதிகாரிகள் குழுவொன்றும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக ரங்க திஸாநாயக்க தெரிவித்தார். (ம-7)

## வடக்கு,கிழக்கில்...

புலனாய்வுப்பிரிவு அறிவித்துள்ளது.

இந்த விடயத்தை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நேற்று (16) கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ்.போதரகமவிடம் இதனைத் தெரிவித்துள்ளது.

இந்த 10 ஆயிரம் தங்கப்பொருட்கள் தற்போது மத்திய வங்கியின் பாதுகாப்பில் உள்ளதாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்த 10 ஆயிரம் தங்கப்பொருட்களின் எடையை அளவிட சுமார் ஒரு வருடம் ஆனது என்றும் குற்றப்புலனாய்வுத் துறை நீதிமன்றத்தில் அறிவித்துள்ளது.

மேலும், தங்கப்பொருட்கள் குறித்து நீதிமன்றத்தில் ஒரு விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

குறித்த தங்கப் பொருட்களை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்கு அனுப்பி, நீதிமன்றத்தில் ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதிபதி முந்தைய நீதிமன்ற அமர்வில் உத்தரவிட்டிருந்தார்.

விடுதலைப்புலிகளின் முகாம்கள், சட்டவிரோத வங்கிகள் மற்றும் பிற கட்டிடங்களில் இருந்து இந்த தங்கப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு, தற்போது இராணுவப்புலனாய்வு பணியகத்தின் காவலில் உள்ள நிலையில், அவற்றை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் ஆணையத்திற்குப் பரிசோதனைக்காக அனுப்பி, அறிக்கை கோருமாறு முந்தைய நீதிமன்ற விசாரணையில் உத்தரவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## செம்மணி மனிதப்...

என்புக்கூட்டுத் தொகுதிகளின் எண்ணிக்கை 366 ஆக உயர்வடைந்துள்ளது.

செம்மணிப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 26ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின் குமார் முன்னிலையில் காலை 7.45 மணி முதல் நடைபெற்றது.

நேற்றைய அகழ்வுப் பணிகள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துரைத்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் ,

அகழ்வு பணியின் போது, 2 சிறுவர்கள் உட்பட 06 என்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் மேலும் புதிதாக 06 என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இது வரையிலான அகழ்வுப் பணிகளின் போது, 366 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 357 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை பிற சான்றுப் பொருளாக இரண்டு நாணயங்களை ஒட்டிய வாறு என்புக்கூடொன்றின் இடுப்பு பகுதியில் இருந்து சான்றுப்பொருட்களாக மீட்கப்பட்டு நூற்றிபத்தொன்பதாவது பிற சான்றுப் பொருளாக அடையாளமிடப்பட்டு நீதிமன்ற கட்டுக் காவலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இன்று 27 ஆம் நாள் அகழ்வுப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். நேற்றைய அகழ்வில் யாழ். பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## செம்மணி...

அகழ்வுப் பணிகளை நேரில் பார்வையிட நீதி அமைச்சரின் தலைமையிலான விசேட குழு செம்மணிப் பகுதிக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நேரில் விஜயம் செய்யவுள்ளது.

குறித்த குழுவினர் அகழ்வாய்வுத் தளத்திற்கு விஜயம் செய்ய நீதிமன்ற அனுமதி கோரி நேற்று செவ்வாய்க் கிழமை (16) நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்துள்ளனர்.

அதன் அடிப்படையில் இன்று புதன்கிழமை (17) வழக்கு அழைக்கப்பட்டு, நீதி அமைச்சர்குழுவை அனுமதிப்பது தொடர்பிலான அறிவித்தலை அறிவிக்கும் என சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை குறித்த அமைச்சர் குழுவுடன் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் விசேட பிரதிநிதிகள்குழுவும்இணைந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## கைது செய்வதை...

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் குறித்து, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவைக் கோரி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தரணி சனத் விஜேவர்தன ஊடாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில், பிரதிவாதிகளாகப் பொலிஸ் மா அதிபர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் அதன் நிலையப் பொறுப்பதிகாரி மாதவ குணவர்தன ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2026.06.16 — சீட்டிழுப்பு இலக்கம் 6220 — Y 1 6 8 0 2 5
அத சம்பத — Y 8 0 2 5 — சீட்டிழுப்பு இலக்கம் 0795
சுப தவசக் — திகதி 2026.06.16 — சீட்டிழுப்பு இலக்கம் 0336 — மேடம் 19 41 54 — 6880
தன நிதானய — திகதி - 2026.06.16 — சீட்டிழுப்பு இலக்கம் - 2250 — X 61 70 72 74 X
மெகா பவர் — திகதி 16/06/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2568 — U 08 13 20 65 69
ஜய — 2026.06.16 — 0488 — R 7 6 0 5
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4462 — சீட்டிழுப்பு திகதி 16.06.2026 — N 02 19 42 63
ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.06.16 — சீட்டிழுப்பு இலக்கம் 1529 — கன்னி 14 27 37 60 கன்னி
உத்தியோகபூர்வ முடிவுகள் — 16.06.2026 — வெற்றி வாரம் 0928 — 0 — 0 2 9 9 7 4 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,601,459.60
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3194 — 25000 பணப் பரிசு 20645 — சீட்டிழுப்பு திகதி 2026.06.16 — தினம் செவ்வாய்க்கிழமை — 22 38 48 70 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 135,166,039.20
சனிதா — திகதி 16.06.2026 — வெற்றி வாரம் 5355 — 02 07 25 80 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,489,061.20 — 27563
சசிரி — வெற்றி வாரம் 1024 — சீட்டிழுப்பு திகதி 16.06.2026 — செவ்வாய்க்கிழமை — 01 05 49 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,126,640.00
சீட்டிழுப்பு வாரம் 4906 — சீட்டிழுப்பு திகதி 16.06.2026 — தினம் செவ்வாய்க்கிழமை — 28 29 38 49 கடகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,685,679.60
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — U 03 29 32 43 66 — 2370 — 16.06.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.294,634,274.00
அத கோடிபதி — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 3020 — சீட்டிழுப்பு திகதி 2026.06.16 — 01 16 49 75 N — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,892,555.20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurantக்கு Waiter| House Keeper| Manager தேவை (7851)

தொடர்புகளுக்கு
076 830 3931



## சோதிடர் தேவை

சமூக சேவை நோக்குடன் யாழ்ப்பாணத்தில் இயங்கும் **கல்யாண மாலை** சர்வதேச இலவச திருமண சேவைக்கு திருமணப் பொருத்தம் பார்ப்பதில் சிறப்புத் தேர்ச்சியுடைய சோதிடர் தேவை.
(ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

தொடர்புகளுக்கு :
076 097 3121



## பல்வகைத்தன்மையே இலங்கையின் பலம்

பல மதங்கள், இனங்கள் மற்றும் கலாசாரங்களால் இலங்கை வலிமையாக உள்ளது.
வேறுபாடுகளை ஆயுதமாக மாற்றுவதன் மூலம் வெறுப்புப் பேச்சு இவ் அடித்தளத்தை அச்சுறுத்துகிறது.

எங்களைப் பிரிக்கும் கருத்துக்களை நிராகரிப்போம். மரியாதை, இணக்கம் மற்றும் ஒற்றுமையைத் தெரிவு செய்வோம்.

இந்தத் தகவல் SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது. (7775)



## மாப்பிள்ளை தேவை

01. வேலணை, இந்து, 1992, ரேவதி, MBBS doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (32198)
02. அல்வாய் - கோப்பாய், இந்து, ரோகிணி, 1993, Phd, Lecture, canada பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33627)
03. தெல்லிப்பழை, இந்து, 1994, பூரட்டாதி, MBBS, MD, Doctor, USA citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (36611)
04. காரைநகர், இந்து, 1995, பூரம், BSc, Bank officer, UK citizen, born & brought up in uk பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33254)
05. கொக்குவில், இந்து, 1996, பூரட்டாதி electrical engineer, USA citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55426)
06. சுதுமலை, இந்து, 1994, சுவாதி, CPA Accountant, Divorce, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33103)
07. தெல்லிப்பழை, இந்து, 1993, அவிட்டம், Masters, scientist, UK + France citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (56817)
08. குப்பிளான், இந்து, 1997, கேட்டை, Lawyer, Germany citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55147)
09. சரவணை, இந்து, 1993, அஸ்வினி, BSc software Engineer, Singapore citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54241)
10. நீர்வேலி, இந்து, 1996, பூராடம், A/L, IELTS, widow (விதவை) பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (52941)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு. (C-5850)

S.Sharma J.P 077 539 3728
www.thaalee.com 074 387 3686


## ஈஸ்டர் தாக்குதல்...

யில் நடத்தப்பட்ட கொடூரமான ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டறிந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டவும் பாரபட்சமற்ற விசாரணையை மேற்கொள்ளவும் வலியுறுத்தி கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத் திற்கு முன்பாக நேற்று நண்பகல் பாரிய அமைதி ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

சமூக நீதிக்கட்சி, பல்வேறு சிவில் அமைப்புகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

சமூக நீதிக்கான அமைப்பின் தலைவர் அர்க்கம் முனீர் தலைமையில் நடைபெற்ற இந்த அமைதிப் போராட்டத்தில், மனித உரிமைப் போராட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டுவரும் பிரபல சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டக்காரர்கள் "உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரிகள் யார்? ஒட்டுமொத்த தேசமும் அறிய விரும்புகிறது!", "உண்மையைப் புதைக்க முடியாது, நீதி வெல்ல வேண்டும்!" மற்றும் "ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விசாரணைகளுக்குத் தடையை ஏற்படுத்த முயற்சிப்பவர்களுக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்துக!" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை ஏந்தியவாறு விசாரணைகளின் வெளிப்படைத் தன்மையை வலியுறுத்தினர்.

மேலும் இந்த அமைதிப் போராட்டத்தில் இஸ்லாமிய பாரம்பரிய ஆடை அணிந்த கணிசமான இஸ் லாமியப் பெண்கள் முன்னணியில் நின்று சுலோக அட்டைகளை ஏந் தியவாறு நீதிக்காகக் குரல் கொடுத் தமை குறிப்பிடத்தக்கதாகும்.

போராட்டக் களத்தில் வைக்கப் பட்டிருந்த பிரதான பதாகையில், "ஈஸ்டர் தினத் தாக்குதலின் சூத்திரதாரிகளைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்டும் பாரபட்சமற்ற விசாரணைக்கு பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தின் முழு ஆதரவு உண்டு!" என்ற வாசகம் மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (ம-7)


## வேலையாட்கள் தேவை

- உதவி ஆசிரியர் (ஆண்கள் - இரவுக் கடமை)
- அலுவலகச் செய்தியாளர் (ஆண்கள் - இரவுக் கடமை)
- இயந்திர இயக்குநர் - பயிலுநர் (ஆண்கள் இரவுக் கடமை)

- க.பொ.த உயர்தரத்தில் சித்தி.
- யாழ்.நகரிற்கு அண்மையில் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
076 097 3121



NORTHERN UNI
EXPERIENCE. EXPERTISE. EXCEL
COMMERCIAL BANK
HAPPENING TODAY!
உலகளாவிய சந்தையில்
தொழில் வாய்ப்புகளை விரிவுபடுத்த விரும்பும் தொழில்முனைவோர்களுக்காக



PayPal & Freelancing
AWARENESS PROGRAM
Commercial Bank ஆனது SLIIT NORTHERN UNI உடன் இணைந்து வழங்குகிறது.
இந்நிகழ்வில்,
1. PayPal கணக்கை உருவாக்குதல் மற்றும் பயன்படுத்துதல்
2. சர்வதேச வாடிக்கையாளர்களிடமிருந்து பாதுகாப்பான பணப்பரிவர்த்தனைகளைப் பெறுதல்
3. உலகளாவிய வருமானத்தை திறம்பட நிர்வகித்தல்
திகதி: புதன்கிழமை, 17 ஜூன் 2026
நேரம்: மதியம் 2.00 மணி – 4.00 மணி வரை
இடம்: SLIIT NORTHERN UNI No. 239, Arasadi Road, Kantharmadam, Jaffna
Call & Reserve Your Seat 021 7534 807
LIMITED SEATS ARE AVAILABLE!
Secure Payments | Global Clients | Limitless Opportunities
(C-5851)



## வேலைவாய்ப்பு
### Clerk - பெண்

யாழ்.நகரில் அமைந்துள்ள பிரபல கணனி நிறுவனத்திற்கு கணனி வேலை தெரிந்த (MS Office) பெண் பணியாளர் தேவை. தகைமையுள்ளவர்கள் கீழ்க்காணும் Whatsapp இலக்கத்திற்கு சுயவிபரக்கோவையினை அனுப்பி வைக்கவும். (C-5849)

WhatsApp No - 077 063 3408
(யாழ்.நகரை அண்மித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)


## நுவரெலியாவில் பாரிய விபத்து

நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் நேற்றுப் பிற்பகல் அதிக சுமையுடன் பயணித்த கனரக வாகனம் ஒன்றின் பிரேக் செயலிழந்தமையால் வீதியோரத்தில் நிறுத்தி வைத்திருந்த ஒரு காருடனும் கனரக வாகனத்திற்கு முன்பாகச் சென்று கொண்டிருந்த ஒரு முச்சக்கரவண்டி மற்றும் ஜீப்புடனும் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் நான்கு வாகனங்களும் பலத்த சேதமடைந்தபோதிலும் வாகனங்களில் பயணித்தவர்கள் அதிர்ஷ்டவசமாக சிறு காயங்களுடன் உயிர் தப்பினர்.

நுவரெலியா பொலிஸார் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மரண அறிவித்தல்



### இராசலிங்கம் குமுதா

தோற்றம் : 13.11.1965 மறைவு : 12.06.2026

வசாவிளான் கரம்பக்கடவையைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் குமுதா அவர்கள் கடந்த 12.06.2026 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை *(18.06.2026)* வியாழக்கிழமை காலை *8* மணியளவில் நடைபெற்று பூதவுடல் காலை *11* மணியளவில் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (7857)

புழும் றோட், பெரிய லேன், கோப்பாய் தெற்கு.

தகவல்: குடும்பத்தினர்
077 998 7699, 077 977 3817

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.